விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 324 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 22 சனிக்கிழமை (08.11.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



### பொருளாதார நெருக்கடி மீண்டும் ஏற்படாது

# ஊழலை நாட்டிலிருந்து களைய புதிய சட்டங்கள் இயற்றப்படும்

## பட்ஜெட்டை சமர்ப்பித்து ஜனாதிபதி உரை

(கொழும்பு)

- கஷ்டப் பிரதேசத்தில் சேவையாற்றும் அதிபர் ஆசிரியருக்கான கொடுப்பனவு அதிகரிப்பு.
- அரச ஊழியர்களுக்கான பண்டிகைக்கால முற்கொடுப்பனவு 15ஆயிரம் ரூபாயாக அதிகரிப்பு.
- மாகாண சபைத் தேர்தலுக்கு ரூ.10 பில்லியன் ஒதுக்கீடு.
- பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகன அனுமதிப்பத்திரம் இல்லை.
- யாழ்ப்பாணம் உட்பட 10 நகர அபிவிருத்திக்கு ரூ.2 ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு.

(04ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள்

### ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போர் காரணமாக எந்தவொரு வீடும் அற்ற குடும்பங்களுக்காக 2 ஆயிரத்து 500 வீடுகளை நிர்மாணிப்பதற்கு தற்போது ஒதுக்கப்பட்டுள்ள 3 ஆயிரத்து 850 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு, ரூபா 5 ஆயிரம் மில்லியனாக அதிகரிக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று (7) பாராளுமன்றத்தில் முன்வைக்கப்

15ஆம் பக்கம் பார்க்க

## சலுகைகள் இல்லாத ஐ.எம்.எப்பின் பட்ஜெட்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு



(கொழும்பு)

2026ஆம் ஆண்டு அநுர அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டமானது மக்களுக்குச் சலுகை

04ஆம் பக்கம் பார்க்க

## ஊடகவியலாளர்களுக்கு வீடு வழங்க நடவடிக்கை

### ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

ஊடகவியலாளர்களுக்கு வீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவை பாராளுமன்றில் நேற்று சமர்ப்பித்து உரையாற்றும்போதே மேற்கண்ட

15ஆம் பக்கம் பார்க்க

## மஹாபொல கொடுப்பனவு அதிகரிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கான மஹாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவு அதிகரிக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க

15ஆம் பக்கம் பார்க்க

## துண்டுவிழும் தொகை ரூ.1,757 பில்லியன்

(கொழும்பு)

2026 வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கத்தின் மொத்த வருவாய் ரூ. 5,300 பில்லியனாகவும் மொத்தச் செலவு ரூ.7 ஆயிரத்து 057 பில்லியனாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்படி வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை ரூ.ஆயிரத்து 757 பில்லியனாக உள்ளது.

2026 வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில்

15ஆம் பக்கம் பார்க்க

## முல்லையில் கிணற்றில் குதித்தவர் மரணம்




(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு குமுழமுனைக் கிராமத்தில் கிணற்றில் குதித்த குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

### 20 ஆண்டுகளின் பின்னர்

## மூன்று சிசுக்களை பிரசவித்த தாய் மரணம்




(யாழ்ப்பாணம்)

20 வருடங்களின் பின்னர் ஒரே பிரசவத்தில், மூன்று குழந்தைகளை பிரசவித்த தாய் ஒருவர் ஒரு மாத காலம் தீவிர சிகிச்சை

15ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் விபத்து; கரவெட்டி இளைஞன் பலி



(வவுனியா)

வவுனியா கனகராயன்குளம் பகுதியில் நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் யாழ்ப்பாணம், கரவெட்டிப் பகுதியைச்

15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது ஒலிக்கும் உங்கள் நாளிதழ்

## புதுக் கடை திறப்பு விழா

**யாழ். பருத்தித்துறை பிரதான வீதியில், நாவலர் மடம் கரணவாய் கரவெட்டி என்னும் முகவரியில்**


## “நியூ சிட்டி” கோழிக்கடை

8ஆவது கிளை இன்று (08.11.2025) சனிக்கிழமை கோலாகலமாக திறந்து வைக்கப்படுகின்றது.

இன்று தொடக்கம் கோழி இறைச்சி, முட்டை மற்றும் உரித்த கோழி சுகாதார முறைப்படி சுத்தம் செய்து விரும்பிய விதத்தில் வெட்டித் தரப்படும். மலிவு விலையில் பெற்றுக்கொள்ள முடியும்.

**இன்றைய விலை**

| | |
|---|---|
| புறொயிலர் உயிர்க்கோழி | - 1 kg 700.00 |
| புறோயிலர் இறைச்சி | - 1 kg 950.00 |
| உயிர்க் கோழி | - 1 kg 1200.00 |
| கல்பேற் உயிர்கோழி | - 1 kg 650.00 |
| கல்பேற் இறைச்சி | - 1 kg 1000.00 |
| பேரன்ஸ் உயிர்கோழி | - 1 kg 850.00 |
| பேரன்ஸ் இறைச்சி | - 1 kg 1200.00 |



இவை அனைத்தும் எமது அனைத்து கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தலைமையகம் : **குருநகர், யாழ்ப்பாணம்.**

தொடர்பு: **021 430 3354**

(5862)


## கேள்வி அறிவித்தல்
### நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
### சபை நிதி - 2025
### Tipper வாகனங்களை வாடகைக்கு அமர்த்தல்

01. **தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விக்கான விலைமனுக்கள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட பொருட்கள் கொள்வனவிற்காக கோரப் படுகின்றது.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் **(Black List)** சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்,** (தொலைபேசி இலக்கங்கள்.021-222-2700, பக்ஸ் இல 021-222-0138 e.mail - npsnallur@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் **10.11.2025** திகதியிலிருந்து **2025.11.24** ஆம் திகதி வரை மேற்கூறிய அலுவலகத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** அலுவலகத்தில் **10.11.2025ஆம்** திகதியிலிருந்து **24.11.2025 ஆம்** திகதி வரை காலை **09.00** மணிக்கும் **14.00** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா.1000/- (வரி நீங்கலாக)** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்,** எனும் முகவரிக்கு **25.11.2025ஆம்** திகதி **மு.ப 11.00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
07. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று) நாட்கள் **(26.01.2026)** வரையும் செல்லுபடியாகும்.
08. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
09. கேள்வி முன்னாயத்த கூட்டம் **18.11.2025(செவ்வாய்க்கிழமை) மு.ப 11.00** மணிக்கு சபையின் கலந்துரையாடல் மண்டபத்தில் இடம்பெறும்.

| ஒப்பந்த இலக்கம் | பொருட்களின் விபரம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|
| | | | மீளளிக்கும் பிணை வைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NPS/Tipper Service/2025 | நல்லூர் பிரதேச சபையினால் கால்வாய்களில் அகழ்வு செய்யப்பட்ட மண் மற்றும் தரம்பிரிக்கப்பட்ட கழிவுப் பொருட்களை ஏற்றியிறக்குவதற்காக Tipper வாகனங்களை வாடகைக்கு அமர்த்தல் | வியாபாரப் பதிவுச் சான்றிதழ் உள்ள நிறுவனமாக இருத்தல் | 35,000.00 | 26.01.2026 |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.**

(C-4283) **08.11.2025**


## மணல் விற்பனைக்கு

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு.

- தென்மராட்சி - 50,000
- யாழ்.மாவட்டம் - 55,000
- வடமராட்சி - 55,000

விநியோகிக்கப்படும். மற்றும் கனரக வாகனங்களுக்கு யாழ். மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டு தரப்படும்.

(5859)

தொடர்புகளுக்கு :
**077 394 9165**

## கடை வாடகைக்கு உண்டு

மானிப்பாய் வீதி ஆலடிச் சந்தியில் கடைத் தொகுதி வாடகைக்கு உண்டு.
12 அடி அகலம் 27 அடி நீளம்

**077 411 8851**
**077 505 8561**

(5860)


## மார்ச் முதல் டிஜிட்டல் அடையாள அட்டை

(கொழும்பு)

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் டிஜிட்டல் அடையாள அட்டை அறிமுகப்படுத்தப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று நடைபெற்ற பட்ஜெட் உரையின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

டிஜிட்டல்பொருளாதாரத்தை மேம்படுத்த 25,500 மில்லியன் முதலீட்டை பெறவுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-7)


## தேவை

மின் இணைப்பாளர், மின் இணைப்பு உதவியாளர் தேவை.
3000 - 3500 வரை சம்பளம் + OT
Fire line Technician மற்றும் Fire line உதவியாளர் உடனடியாகத் தேவை.

(C-329)

தொடர்புகளுக்கு :
**075 711 4770**

## விற்பனையாளர் தேவை


கல்வியங்காடு மற்றும் திருநெல்வேலி பகுதியில் லொத்தர் சீட்டு விற்பனைக்கு ஆட்கள் தேவை.

தொடர்புகளுக்கு :
**077 078 2395**
**077 131 2534**

(5858)


## மரண அறிவித்தல்

## கோவிந்தபிள்ளை நடராசா
### (புத்தகக்கடை நடராசா)
### (ஓய்வுபெற்ற கூட்டுறவுச் சங்க முகாமையாளர்)



பிறப்பு 26.06.1938 இறப்பு 07.11.2025

சாரையடி புலோலி தென்மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தபிள்ளை நடராசா அவர்கள் நேற்று (07.11.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தபிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் பொன்னையா - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற விஜயலக்ஷ்மி அவர்களின் அன்புக் கணவரும் கலைவாணி (சுவிஸ்), குகதாசன் (லண்டன்), சோதிரூபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், மருதங்கேணி), ஜெயானந்தன் (லண்டன்), பவானி (அவுஸ்திரேலியா), பவானந்தன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சிறீதரன் (சுவிஸ்), வதனேஸ்வரி (லண்டன்), வினோதினி (பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவாளர்), தர்மிளா (லண்டன்), புஸ்பராஜா (அவுஸ்திரேலியா), ஜானகி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிஷேகா, பிரசன்னா, ஆராதனா, அபிநயா, அரூரன்,பிரார்த்தனா, பிரவீன், பிரஷோபன், சாய்சரண், சாகித்யன், அஸ்வின், கீர்த்தன், ஹரினி, ஹஷினி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான லட்சுமிப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை, தங்கம்மா மற்றும் கணேசலிங்கம் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், தியாகராஜா மற்றும் அமிர்தலிங்கம் (அவுஸ்திரேலியா), பஞ்சலிங்கம் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் பரமேஸ்வரி, பாலச்சந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை அவர்களின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.11.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
021 226 2338

(C-4284)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுபேரைப் பலிகொண்ட கத்திக்குத்து
# இலங்கை இளைஞனுக்கு ஆயுள் தண்டனை
## தீர்ப்பளித்தது ஒட்டாவா நீதிமன்றம்




**(ஒட்டாவா)............................ 2024 ஆம் ஆண்டு கனடாவின் ஒட்டாவாவில் இலங்கையைப் பூர்வீக மாகக் கொண்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உட்பட 6 பேரைக் கொலை செய்த சம்பவத்தில் குற்றச்சாட்டுக்கு உள்ளான இலங்கையைச் சேர்ந்த 20 வயது இளைஞருக்கு ஆயுள் தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப் பளித்துள்ளது.**

ஒட்டாவாவைச் சேர்ந்த தாய், 4 பிள்ளைகள் மற்றும் அவர்களது நண்பர் உட்பட ஆறுபேரை கத்தியால் குத்திக் கொலை செய்த சம்பவத்தில் குற்றம் சுமத்தப்பட்ட இலங்கை இளைஞர் ஒருவருக்கு, குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஒட்டாவா நீதிமன்றில் இடம்பெற்ற இவ் விசாரணையின் போது ஃபெப்ரியோ டி சொய்சா என்ற இளைஞன் தன் மீது சுமத்தப்பட்ட 6 குற்றச்சாட்டுக்களில் 4 குற்றச்சாட்டுகளை ஒப்புக் கொண்டிருந்தார்.

தமது நண்பரான தனுஸ்க விக்கிரமசிங்க என்பவரின் வீட்டில், சொய்ஸா தமது கற்றல் செயற்பாடுகளுக்காக தங்கியிருந்த போதே இந்தக் கொடூரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

தம்மிடம் பணம் இல்லை என்ற காரணத்தினாலேயே இந்த கொடூரக் கொலைகளைச் செய்ததாக முன்னதாக சொய்ஸா வாக்கு மூலம் அளித்திருந்தார்.

ஒட்டாவாவின் மேயரால் தலைநகரம் இதுவரை கண்டிராத மிகவும் அதிர்ச்சியூட்டும் வன்முறைச் செயல்களில் ஒன்றாக விபரிக்கப்பட்ட இந்தக் கொலைச் சம்பவம் கனடாவின் ஊடகங்கள் முழுவதிலும் தலைப்புச் செய்திகளாக உருவெடுத்ததுடன் இலங்கை ஊடகங்களிலும் பரபரப்பாகப் பேசப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-8)

# தொழில்கல்வி சேவைக்கு 1966 ஐ அழைக்க முடியும்

(கொழும்பு)

பாடசாலை கல்விக்குப் பிறகு தொழிற்கல்விக்குச் செல்வதற்கு மாணவர்களுக்குத் தேவையான தகவல்களைச் சரியாகவும் திறமையாகவும் வழங்குவதை நோக்கமாக கொண்டு '1966' தொழிற்கல்வி துரித அழைப்பு சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நாரஹேன்பிட்டவில் உள்ள 'நிபுணதா பியச' வளாகத்தில் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சர், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் தலைமையில் இது ஆரம்பிக்கப்பட்டது.

'1966' அவசர அழைப்பு சேவை மூலம், தொழிற்கல்வி தொடர்பான எந்தவொரு தகவலையும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் திறமையான சேவைக்காக, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் (AI) மூலம் தொழிற்கல்வி அமைச்சின் தொழில்நுட்ப அதிகாரிகளால் தயாரிக்கப்பட்ட 'AI Chat BOT' இற்குள் பிரவேசிக்கவும் முடியும்.

இதன் மூலம் தொழிற்கல்வி தொடர்பான எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு பெற்றுக்கொள்ள முடியும். (க-8)

### வி.என்.மதியழகனுடனான நேர்காணல்
# தென்றல் பண்பலையில்

(கொழும்பு)

சோழ மன்னர்களின், தமிழகத்தின், தென்நகரக் கோவில்களில் ஒன்றான வேதாரண்யேஸ்வரர் கோவிலில் நடைபெறும் வழிபாடுகள் பற்றிய விபரங்களை வானொலி நேயர்களுக்கு தெரியப்படுத்தும் நோக்கில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை ஏழுமணிக்கு இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன தமிழ் தேசிய சேவையில் இடம்பெறும் "வீசியும் வேளை" நிகழ்ச்சியில், சொற்கோ வி.என். மதியழகன் அவர்களுடனான நேர்காணல் இடம்பெறும்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தென்றல் பண்பலை உதவிப் பணிப்பாளர் நாகபூஷணி கருப்பையா இந் நேர்காணலை தொகுத்து வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-8)

# பதில் பிரதம நீதியரசராக
## உச்ச நீதிமன்ற நீதியரசர் எஸ்.துரைராஜா




(கொழும்பு)

உச்ச நீதிமன்ற நீதிபதி எஸ்.துரைராஜா நேற்று காலை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் முன்னிலையில் பதில் பிரதம நீதியரசராக பதவியேற்றார்.

பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன வெளிநாடு சென்றுள்ள நிலையில்அவர் நாடு திரும்பும் வரை இந்த நியமனம் வழக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார். (க-8)

# பிரதமர் ஹரிணி அமரசூரியவை சந்தித்த பங்களாதேஷ் வெளிவிவகார செயலாளர்



(கொழும்பு)

பங்களாதேசத்தின் வெளிவிவகார அமைச்சின் வெளிநாட்டுச் செயலாளரும் தூதுவருமான அசாத் ஆலம் சியாம் உள்ளிட்ட தூதுக் குழுவினர் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இலங்கை பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவைச் சந்தித்தனர்.

வெளிநாட்டுச் செயலாளரையும் அவரது தூதுக்குழுவினரையும் வரவேற்ற பிரதமர், தற்போதைய பிராந்திய நிலைமைகள் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான பொதுவான நலன்கள் குறித்துக் கலந்துரையாடினார். இதன்போது பொறுப் புக்கூறல், வெளிப்படைத் தன்மை மற்றும் நல்லாட்சி ஆகிய விடயங்களுக்கு விசேட முக்கியத்துவம் கொடுக்கப் பட்டது.

இந்தச் சந்திப்பில் இரு நாடுகளினதும் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டனர். (க-8)

# நீரிழிவு தின விழிப்புணர்வு

(யாழ்ப்பாணம்)

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலை JICA கட்டட முன்றலில் இருந்து நீரிழிவு தின விழிப்புணர்வு நடைபவனி இடம்பெறவுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயரம் பாய்தலில் தேசிய சாதனை; மன்னார் மாணவிக்கு கௌரவிப்பு



பாடசாலைகளுக்கு இடையிலான 38 ஆவது தேசிய மட்ட போட்டியில் பங்கு பற்றி தேசிய ரீதியில் சாதனை படைத்த மன்னார் பேசாலை பற்றிமா மத்திய மகா வித்தியாலய மாணவியை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவின் பேசாலை மன்/பற்றிமா மத்திய மகா வித்தியாலய மாணவி வில்சன் வில்சியா தியகம ராஜபக்ச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான 38 ஆவது தேசிய மட்ட போட்டியில் கலந்து கொண்டு சாதனை படைத்துள்ளார்.

14 வயதுக்குட்பட்ட உயரம் பாய்தல் போட்டியில் தேசிய மட்டத்தில் புதிய சாதனையாக 1.56 மீற்றர் பாய்ந்து தனது புதிய சாதனையை நிலை நாட்டி தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

ஏற்கனவே 2023 ஆம் ஆண்டு உயரம் பாய்தலில் தேசிய மட்ட சாதனையாக 1.55 மீற்றர் உயரத்தை வத்தளை சர்வதேச பாடசாலை ஒன்றின் மாணவி நிலை நாட்டியிருந்தார்.

குறித்த சாதனையை முறியடித்து மன்னார் பேசாலையைச் சேர்ந்த மன்/பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் வில்சன் வில்சியா என்ற மாணவி புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

தேசிய சாதனை படைத்த மாணவியை கௌரவிக்கும் நோக்கில் குறித்த பாடசாலை சமூகம் மற்றும் கிராம மக்கள் மாணவியை மன்னார் நுழைவுப் பாலத்தில் இருந்து சுமார் 15 கிலோமீற்றர் தூரம் வாகன பவனியாக பேசாலை வரை வரவேற்று பேசாலை பிரதான சந்தியில் இருந்து பேண்ட் வாத்தியம் மற்றும் நாட்டுப்புற நடன நிகழ்வுடன் வரவேற்று பாடசாலை அரங்கில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. (3-285)

# கால்பந்து உலகின் ஒரு சகாப்தம் முடிவுக்கு வருகிறதா?

## றொனால்டோ நெகிழ்ச்சி

உலகின் முன்னணி கால்பந்தாட்ட வீரர்களில் ஒருவரான கிறிஸ்டியானோ றொனால்டோ விரைவில் ஓய்வு பெறவுள்ளதாக அறிவித்துள்ளார்.

40 வயதான றொனால்டோ, இது கடினமான முடிவாக இருந்தாலும், இதற்காகத் தாம் பல ஆண்டுகளாக தம்மைத் தயார் செய்து வருவதாகக் கூறியுள்ளார்.

அத்துடன், தற்போது தமக்கும் தமது குடும்பத்திற்கும், குழந்தை களின் வளர்ச்சிக்கும் அதிக நேர த்தை ஒதுக்க விரும்புவதாகவும் கூறியுள்ளார்.

அல் நஸ்ர் அணிக்காக தற்போது விளையாடிவரும் றொனால்டோ, கழக மற்றும் நாட்டுக்காக மொத்தம் 952 கோல்கள் அடித்து சாதனை படைத்துள்ளார்.

முன்னதாக அவர், ஆயிரம் கோல் என்ற இலக்கை அடைந்ததும் ஓய்வெடுப்பதாக தெரிவித்திருந்தார்.




இந்த நிலையிலே, கிறிஸ்டியானோ றொனால்டோ தற்போது ஓய்வு குறித்து அறிவித்துள்ளார். (3)


## வேலைவாய்ப்பு

யாழில் இயங்கும் சுப்பர் மார்க்கட் மற்றும் பலசரக்கு கடைக்கு கீழ் காணும் ஆட்கள் தேவை.

1. Sales Assistant
2. Store Keeper
3. Accountant
4. Manager
5. Packaging (பொதியிடல்)
6. Driver

> வயது எல்லை 18 – 40

> யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

விபரங்களுக்கு :

077 419 5209, 077 419 5218

(5861)


## ஊழலை...

பாராளுமன்றத்தில் நேற்று 2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட பாதீட்டை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும்கருத்துரைத்த ஜனாதிபதி,

ஊழலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளின் மூலம் முதலீட்டுக்கான சிறந்த சூழலை அரசாங்கம் உருவாக்கி வருகிறது. வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் மக்கள் நம்பிக்கையை வென்றெடுக்கும் நோக்குடன், ஆட்சி மறுசீரமைப்பு மற்றும் ஊழலுக்கு எதிரான செயற்பாடுகளை அரசாங்கம் துரிதப்படுத்தியுள்ளது. இதற்கான புதிய சட்டவரைபுகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

அரச நிதி நடவடிக்கைகளுடன் தொடர்புடைய டிஜிட்டல்மயமாக்கல் பல்வேறு துறைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இலத்திரனியல் பெறுகை முறைமை நிர்மாணிக்கப்படும். இது ஊழல் மற்றும் மோசடிகளுக்கான சந்தர்ப்பங்களை இல்லாதொழிக்கும் என்றார்.

மேலும் வரவு செலவுத் திட்ட முன்மொழிவில்,

கஷ்டப்பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் 20 ஆண்டுகளாக அதிகரிக்கப்படாதிருப்பதனால், அத்தகைய ஆசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில் இக் கொடுப்பனவை 1,500 ரூபாவால் அதிகரிப்பதற்கு நாம் முன்மொழிகிறோம்.

கல்வி இலக்குகளை அடைவதில் அதிபர்களின் நிர்வாகப் பொறுப்புகள் மற்றும் பொறுப்புக்கூறலை அங்கீகரிக்கும் வகையில், அதிபர் பதவியில் பணியாற்றும் அதிபர்களுக்கு வழங்கப்படும் அதிபர் கொடுப்பனவை 1,500 ரூபாவால் அதிகரிக்கவும் கல்வி இலக்குகளை அடைவதை அதிகரிப்பதற்காக ரூபா 1,000 மில்லியனை ஒதுக்கீடுசெய்யவும் நாம் முன்மொழிகிறோம் என்றார்.

மேலும், அரசு ஊழியர்களுக்கான பண்டிகை முற்பணம் ரூ.15,000 ஆக உயரும் - தற்போதைய ரூ.10,000 இலிருந்து ரூ.15,000 ஆக உயர்த்தப்படும் என்றார்.

மேலும், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு வரவு செலவுத் திட்டத்தில் 10 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது.

எனினும் அந்தத் தேர்தலை நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

எல்லை நிர்ணயத்தில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக தேர்தலை நடத்தும் திகதியை உறுதியாக கூற முடியாது.

தற்போதுள்ள சட்டத்தை நீக்கி புதிய சட்டத்தை கொண்டுவர வேண்டியுள்ள தேவையுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறவுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வாகன அனுமதிப் பத்திரம் இனி வழங்கப்படமாட்டாது. பாராளுமன்ற பதவிக் காலம் முடிவடைந்ததும் வாகனங்களை கையளித்து விட்டுச் செல்ல வேண்டும்.

மேலும் யாழ்ப்பாணம், எஹெலிய கொட, மட்டக்களப்பு, சிலாபம், மாத்தறை உள்ளிட்ட அடையாளம் காணப்பட்ட பத்து நகரங்களின் அபிவிருத்திக்கான சாத்தியக்கூறு ஆய்வுக்கு ரூ. 2,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார். (ம-7)

## சலுகைகள்...

கள் இல்லாத சர்வதேச நாணய நிதியத்தின் வரவு செலவுத்திட்டம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார்.

வரவு செலவுத் திட்ட உரை முடிந்த பின்னர் பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இன்று (நேற்று) சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டம் சமூக யதார்த்தத்தை புரிந்து கொண்டு முன்வைக்கப்பட்டதொரு வரவுசெலவுத் திட்டமாக அமையவில்லை.

நாட்டு மக்கள் இன்று பல துயர்கரமான சூழ்நிலைமைகளை எதிர்கொண்டு வாழ்ந்து வருகின்றனர். வறுமை அதிகரித்து காணப்படுகின்றன.

வேலையின்மையும் அதிகரித்துள்ளது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50% மேலாக பங்களிக்கும் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் தொழில் நடவடிக்கைகள் வீழ்ச்சி கண்டு, அவர்களினது வாழ்க்கை சீர்குலைந்து போயுள்ளன. இவர்களைப் பாதுகாக்க இந்த அரசாங்கத்தால் முடியாது போயுள்ளது.

விவசாயிகள், மீனவர்கள், சுயதொழில் புரிவோர், வேலையில்லாப் பட்டதாரிகள் என அனைவரும் தங்கள் பிரச்சினைகளுக்கு எந்தத் தீர்வுகளும் இல்லாமல் தவிக்கின்றனர்.

இந்த வரவுசெலவுத் திட்டமானது ஏமாற்று, பொய்கள் வேலைகள் தமது இருப்பை முன்னோக்கி கொண்டு செல்லும் வரவுசெலவுத் திட்டமாக அமைந்து காணப்படுகின்றது.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு சட்டக் கட்டமைப்பொன்றை உருவாக்கு வேன் என்று ஜனாதிபதி கூறினாலும், அரசாங்கத்துடன் தொடர்புடையவர்கள் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடும் இந்நேரத்தில், இது தொடர்பான தகவல்களை ஊடகங்களுக்கு வழங்க வேண்டாம் என்று சுற்றறிக்கைகளை வெளியிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இந்த அரசாங்கம் போதைப்பொருள் கடத்தல் குறித்து ஊடகங்களில் செய்திகளை வெளியிட்டு வந்தன. ஆனால் இன்று திசைகாட்டி அரசாங்கத்தைச் சேர்ந்தோர் இந்தப் போதைப் பொருள் கடத்தலில் சிக்கிய பிற்பாடு இவற்றை ஊடகங்களில் காண்பிப்பதை தவிர்த்து அதனை மறைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இரட்டை நாக்கு கொண்ட அரசாங்கமாக காணப்படுகின்றது. மக்களுக்கு நிவாரணம் வழங்காத, IMF எழுதிய வரவுசெலவுத் திட்டத்தின் வடிவத்தை ஒத்த வரவுசெலவுத்திட்டமாகும். வறுமை ஒழிப்பு திட்டங்கள் எதுவும் இந்த வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடங்கி காணப்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த ஆண்டு 230 பேர் நீரில் மூழ்கிப்பலி

# அதி உச்ச எச்சரிக்கையுடன் இருங்கள்

## பொது மக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் இலங்கையில் 230 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸ் உயிர்காப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.**

இதில் பெரும்பாலானோர் இளைஞர்கள் ஆவர்.

பல குடும்பங்களுக்கு இந்த உயிரிழப்புகள் பெரும் சோகத்தை அளித்தாலும், உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட தலையீடுகள் மற்றும் மீட்பு முயற்சிகள் காரணமாக, அதே கால கட்டத்தில் 195 உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.

காப்பாற்றப்பட்டவர்களில் 135 பேர் இலங்கையர்கள் என்றும் 60 பேர் வெளிநாட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், அண்மையில் சிலாபம் தெதுறு ஓயாவில் நீராடிக் கொண்டிருந்தபோது, கிரிபத்கொட - மாகொலையைச் சேர்ந்த ஐந்து இளைஞர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

இதில் 16 வயதுக்குட்பட்ட இரண்டு சிறுவர்களும் அடங்குகின்றனர்.

இவர்கள் அனைவரும் அந்தப் பகுதிக்கு சுற்றுலா சென்றிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே பாடசாலை விடுமுறைகள் மற்றும் பண்டிகைக் காலங்களில் நீர்நிலைகளுக்கு அருகில் பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடும்போது அதிஉச்ச எச்சரிக்கையுடன் செயற்படுமாறு, அதிகாரிகள் பொதுமக்களுக்கு அவசர எச்சரிக்கை விடுத்துள்ளனர். (க-8)

## பரிசளிப்பு விழா

(கரணவாய்)

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ப.சந்திரபாகு தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி. செல்வகௌரி சேனாதிராஜா, சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி கல்வி வலயை அழகியல் பாட ஆசிரிய ஆலோசகர் அழகானந்தம் கிருஷ்ணானந்தன் மற்றும் பருத்தித்துறை வேலும் மயிலும் அறக்கட்டளை பிரதம செயற்பாட்டு அதிகாரி தேவராசா சிவகுமாரசாமி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (3-60)

# மீனவர்களின் உயிர் காக்கும் தொழில் நுட்பத்தை வழங்குங்கள்

## இலங்கை இந்தியாவிடம் கோரிக்கை

(கொழும்பு)

ஆழ்கடலில் மீனவர்களின் உயிர்களைப் பாதுகாக்கும் நோக்கில், இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் தொழில் நுட்பத்தை இலங்கைக்கும் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சித்ரால் பெர்னாண்டோ நேற்று முன்தினம் வியாழக்கிழமை இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவை சந்தித்து இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் பெர்னாண்டோ, கடந்த ஜூன் மாதம் இளம் அரசியல் தலைவர்கள் இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது, பெங்களூரில் உள்ள இஸ்ரோவுக்குச் சென்று பார்வையிடும் வாய்ப்பு கிடைத்ததாகவும், அங்கே, விண்வெளி ஆய்வுகளுக்கு மேலதிகமாக, ஆழ்கடலில் மீனவர்கள் எதிர்கொள்ளும் ஆபத்துகளைத் தடுக்க இஸ்ரோ, டிஏடி-எஸ்ஜி எனப்படும் செயற்கைக் கோள் தொழில்நுட்ப அமைப்பை வெற்றிகரமாக உருவாக்கிப் பயன்படுத்தி வருவதை அறிந்து கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து மேலும் ஆராய்ந்த பின்னர், தான் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவை சந்தித்து, புத்தளம் மாவட்டக் கரையோரப் பகுதிகளில் ஆரம்பப் பரிசோதனையாக ஆரம்பித்து, இலங்கை மீனவர்களின் நன்மைக்காக இந்தத் தொழில் நுட்பத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தேன்," என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், மீன்பிடி நடவடிக்கைகளுக்கு வசதியளிக்கும் இந்தியாவின் குறித்த தொழில் நுட்ப மென் பொருளை இலங்கை மீனவ சமூகத்திற்கு வழங்குமாறும் இந்திய உயர்ஸ்தானிகரிடம் கோரிக்கை விடுத்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-8)

# சுற்றுலாப் பயணிகளின் வருகை 1.9 மில்லியனைக் கடந்தது

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் நாட்டிற்கு வருகை தந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 1.9 மில்லியனை கடந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது.

அதேநேரம், நவம்பர் மாதத்தின் முதல் ஐந்து நாட்களில் மொத்தம் 32 ஆயிரத்து 815 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில், சுமார் 19 இலட்சத்து 23 ஆயிரத்து 502 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இந்த காலப்பகுதியில், அதிகபட்ச தினசரி வருகை 7 ஆயிரத்து 412 சுற்றுலாப் பயணிகளாக நவம்பர் முதலாம் திகதி பதிவாகியுள்ளது.

இந்த ஆண்டு இதுவரை, அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ளனர். அதன்படி இந்தியாவிலிருந்து 4 இலட்சத்து 31 ஆயிரத்து 235 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து ஐக்கிய அரபு இராச்சியத்திலும் , ரஷ்யா ,ஜேர்மனி மற்றும் சீனா ஆகிய நாடுகளிலிருந்தும் அதிகப்படியான சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (க-8)

# இரசாயன நீர்த்தாரைப் பிரயோகம்

## இஸ்ரேலில் மூன்று இலங்கையர்கள் பாதிப்பு



இஸ்ரேலில் பணிபுரியும் வெளிநாட்டு பணியாளர்கள் மீது நடத்தப்பட்ட இரசாயனம் கலந்த நீர்த்தாரை பிரயோகத்தின் போது இலங்கை பணியாளர்கள் மூன்று பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான இஸ்ரேல் தூதரகம் அறிவித்துள்ளது.

முன்னதாக சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட காணொளிகள் மற்றும் தகவல்கள் குறித்து தூதரகம் எச்சரிக்கை விடுத்திருந்ததாகவும் டெல் அவி வில் உள்ள இலங்கைத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் வசிக்கும் வெளிநாட்டு புலம்பெயர் தொழிலாளர்களை இலக்கு வைத்து இனம் தெரியாத குழுக்களால் இரசாயனம் கலந்த நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள் ளப்படுவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இலங்கையர்கள் உள்ளிட்ட அனைத்து வெளிநாட்டுப் புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சு மற்றும் குடிவரவு, குடியகல்வு திணைக் களத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை தூதரகம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில் குறித்த இரசாயன நீர்த்தாரைப் பிரயோகம் தொடர்பில் 13 முதல் 19 வயதுக்கு இடைப்பட்ட 5 பேர் இஸ்ரேல் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. (க-8)


## மக்கள் வங்கி
## பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 31.08.2024 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 20.11.2025 திகதி வரை மீட்டெடுக்கப்படாத / புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 9.00 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 21.11.2025 மற்றும் 22.11.2025**

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக்கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/ பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்/ பல்கலைக்கழகம், யாழ்/ கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயல்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (c- 4279)

தொ.பே.இல : 021-222 2601 : 021-222 2602

PEOPLE'S BANK
Pride of the Nation


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி வெற்றிக் கிண்ணம் கட்டைக்காடு சென்.மேரிஸ் வசம்



(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு உடுத்துறை பாரதி விளையாட்டு கழகம் நடாத்தும் மாபெரும் உதைபந்தாட்ட போட்டியின் 23 வயதுப் பிரிவினருக்கான இறுதி போட்டி கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

பாரதி விளையாட்டு கழக மைதானத்தில் பிற்பகல் 3:30 மணியளவில் குறித்த போட்டி ஆரம்பமானது.

இதில் கட்டைக்காடு சென். மேரிஸ் அணியை எதிர்த்து உடுத்துறை பாரதி அணி மோதி இருந்தது.

பரபரப்பாக இடம்பெற்ற ஆட்டத்தின் இறுதியில் கட்டைக்காடு சென்.மேரிஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் பாரதி விளையாட்டு கழகத்தின் 23 வயது பிரிவினருக்கான வெற்றிக் கிண்ணத்தை கட்டைக்காடு சென்.மேரிஸ் தனதாக்கிக் கொண்டது. (3)



நீர்வேலி அருள்மிகு ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி (பழைய அம்மன்) தேவஸ்தானத்தில் கடந்த 3 ஆம் திகதி திங்கட்கிழமை புதிதாக அமைக்கப் பெற்ற நவக்கிரக சந்நிதான கும்பாபிஷேகம் பக்திபூர்வமாக நடைபெற்றது.

## கௌரவ பாராட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சுதுமலை இந்து சமய விருத்திச் சங்க ஆதரவில் யாழ்.பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறைத் தலைவர் பேராசிரியர் சிவஸ்ரீ.மகேஸ் வரக்குருக்கள் பாலகைலாச நாதக் குருக்கள் அவர்களுக்கான கௌரவ பாராட்டு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு மானிப்பாய், சுதுமலை, ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோவிலடி குபேர மஹாலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு சுதுமலை இந்து சமய விருத்திச் சங்கத் தலைவரும் யாழ்.பல்கலைக்கழக ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை பேராசிரியருமான கந்தையா ஸ்ரீ கணேசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.(3)

## வீதியை புனரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி உப பணிமனைக்கு உட்பட்ட கைதடி தெற்கு வட்டாரத்தில் அமைந்துள்ள கட்டை பறித்தான் வீதியினை புனரமைப்பு செய்து தருமாறு வட்டார உறுப்பினர் செ.ஜெயபாலன் ஊடாக பிரதேச சபைத் தவிசாளரிடம் பிரதேச பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அம் மக்கள் தமது கோரிக்கைக் கடிதத்தில்,

மேற்படி வீதியானது கடந்த காலங்களில் கம்பெரலிய திட்டம் ஒரு பகுதியும், சாவகச்சேரி பிரதேச சபையின் நிதி ஒதுக்கீடு ஊடாக இன்னொரு பகுதியும் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளபோதிலும் வீதியின் நடுப்பகுதியான சுமார் 210 மீற்றர் தூரம் தொடர்ச்சியாகப் புனரமைப்பு செய்யப்படாமல் இருந்து வருகின்றது.

இவ் வீதியினை மாணவர்கள், அரச நிறுவனங்களில் பணிபுரிவோர், விவசாயிகள், பொதுமக்கள் எனப் பலரும் பயன்படுத்தி வருவதனால் மேற் படி புனரமைப்பு செய்யப்பட வேண்டிய பகுதியினை விரை வாகப் புனரமைப்பு செய்து தருமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.

வீதியின் புனரமைக்கப்படாத பகுதி மாரி காலத்தில் வெள்ள நீர் தேங்கிப் பொது மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதாகவும் அவர்கள் மேலும் தமது கோரிக்கைக் கடிதத்தில் சுட்டிக்காட்டி இருந்தனர். (3-30)



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்படுகின்ற இளைஞர் பரிமாற்று வேலைத்திட்டம் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் தெற்கிலிருந்து சகோதர மொழி பேசும் 150 இளைஞர் யுவதிகள் பங்கு பற்றியிருந்தனர். (படம்:கஜிந்தன்)

## வவுனியாவில் இடம்பெற்ற திருமூலர் குருபூஜை நிகழ்வு

(வவுனியா)

வவுனியா கந்தபுரம் வாணி வித்தியாலயத்தில் திருமூலர் அவர்களின் குருபூஜை தினம் சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா சேக்கிழார் மன்றத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு பாடசாலை காலை கூட்ட பிரார்த்தனையின் போது பாடசாலை அதிபர் எஸ்.சண்முகரட்ணம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் செட்டிகுளம் பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் சி.கஜேந்திர குமார் அவர்கள் திருமூலர் காட்டிய வழியும் கூறிய கருத்துக்களும் என்னும் தலைப்பில் உரையாற்றினார்.

அத்துடன் வவுனியா சேக்கிழார் மன்றத்தின் செயலாளர் கி. வசந்தரூபன், சேக்கிழார் மன்றத்தின் பொருளாளர் த.சலசலோசன், பாடசாலையின் பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (3-250)



காசிநாதன் விமலநாதனின் "பஜனாமிர்தம்" தொகுப்பு நூல் வெளியீடும், "இனிய தமிழ் கற்போம்- இந்து சமயம் அறிவோம்" நூல் அறிமுக விழாவும் தென்மராட்சி மீசாலையில் அமைந்துள்ள பரமேஸ்வரி மணி மண்டபத்தில் கடந்த 1 ஆம் திகதி சனிக்கிழமை இடம் பெற்றது. (படம்:சுபேசன்)

## அறிவுத்திருக்கோவிலில் யோகா பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத்திருக் கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சக்கரை நோய் கட்டுப்பட, ஆஸ்துமா சளித் தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுப்பட, தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினை தீர, தைராய்ட்டு பிரச்சினை தீர, எளிய முறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், உயிர் வளத்திற்கான காயகல்பப் பயிற்சிகள் மற்றும் சூரிய நமஸ்காரம் என்பன வழங்கப்படும்.

பயிற்சிகளை 14 வயதிற்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண் இருபாலரும் பங்குபெறலாம். குறித்த பயிற்சிகளை தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் கே.ஆர்.முனிரத்தினம் அவர்கள் வழங்குவார்கள்.

மேலதிக தொடர்புகளுக்கு 021 222 2772 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (3)

## மணவாளக்கோல உற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி-கரியபுலம் அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவ பெருமான் ஆலயத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு மணவாளக்கோல உற்சவம் இடம்பெறவுள்ளது.

வைரவப் பெருமானுக்கு 108 சங்காபிஷேகமும் விசேட பூசை வழிபாடுகளுடன் திரு வூஞ்சல் பாடப்பட்டு சுவாமி உலாவரும் திருக்காட்சியும் மதுரகவி காரை.எம்.பி அருளானந்தன் அவர்களின் தெய்வீகப் பேருரை நிகழ்ச்சியும் இடம் பெறவுள்ளதென ஆலய தர்ம கர்த்தா திருமதி விஜயமாலினி ஆனந்த நடேசன் அறிவித்துள்ளார். (3)

## இறையடியார் தோமஸ் அடிகளாரின் மறை மாவட்ட நினைவு நாள்

(யாழ்ப்பாணம்)

மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்த வருடம் (2024 ஆம் ஆண்டு) வெளியிட்ட அம்போஸ்தலிக்க திருமடலில் ஜூபிலி ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் 9 ஆம் திகதி தங்கள் நாடுகளிலுள்ள இறையடியார்களை நினைவு கூரும் திருவழிபாட்டினை நடத்துமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

இதற்கமைய நாளை 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் மறை மாவட்டத்தின் எல்லா கத்தோலிக்க தேவாலயங்களிலும் செபமாலை தாசர் துறவு சபையின் நிறுவுனர் இறையடியார் வ. அ. தோமஸ் அடிகளாரை நினைவு கூரும் திருவழிபாட்டு திருப்பலி சிறப்பாக நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் கோவில் வீதியில் அமைந்துள்ள செபமாலை தாசர் துறவு சபையின் அருள் ஆச்சிரமத்தில் காலை 6 மணிக்கு இறையடியார் வ. அ. தோமஸ் அடிகளாரின் கல்லறை மண்டபத்தில் சிறப்புத் திருப்பலி இடம்பெறவுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டொலர் வருமானம் குறைவு வாகன இறக்குமதி வேண்டாம்

## மத்திய வங்கி ஆளுநர்

(கொழும்பு)

**எதிர்வரும் காலங்களில் இலங்கையின் வாகன இறக்குமதியில் சிக்கல் ஏற்படலாம் என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.**

குறித்த விடயத்தை அரசாங்க நிதி பற்றிய குழுவுடன் நடைபெற்ற கூட்டத்தின் போது தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த மத்திய வங்கி ஆளுநர், இனி வரும் காலங்களில் தொடர்ச்சியாக வாகனங்கள் இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்படலாம். வாகன இறக்குமதியாளர்கள் தொடர்ச்சியாக வாகனங்கள் இறக்குமதி செய்ய தீர்மானிக்கலாம்.

அதனால் இலங்கை ரூபாவின் பெறுமதிக்கு பெரும் தாக்கம் ஏற்படுவதோடு அரசாங்கத்தின் நடைமுறைக் கணக்கில் பாரிய பற்றாக்குறையும் உருவாக்கப்படும். பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்து சுயமாக மீட்சி பெறும் இலங்கை போன்ற நாட்டுக்கு இவ்வாறான நிலைமை ஆபத்தானதாகும் என குறிப்பிட்டுள்ளார்.


வாகன இறக்குமதியால் டொலர் பெருமளவு வெளியேற்றப்படுகின்றன. இலங்கையில் வெளியேற்றப்படும் டொலரை விட உள்வரும் டொலர் குறைவானதாகவுள்ளது.

அதனால் டொலரில் ஏற்படும் பற்றாக்குறையை நிவர்த்திக்கக் கடன் வாங்க வேண்டும்.

அதனால் இன்றைய சூழலில் கடன் பெற்றுக் கொள்ளவும் முடியாது. இவ்வாறான காரணங்களால் ரூபாவின் பெறுமதிக்கும் பெரும் தாக்கம் ஏற்படலாம்.

வாகன குத்தகையில் கடந்த மூன்று மாதங்களில் பாரிய மாற்றங்கள் செய்யப்பட்டன. வாகன இறக்குமதிகள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டால் மேலும் குத்தகையில் மாற்றங்கள் செய்யக் கூடும் என்றார். (க-8)

# நடமாடும் சேவை



(சாவகச்சேரி)

யாழ்.மாவட்டச் செயலகமும் சாவகச்சேரி பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய மாபெரும் நடமாடும் சேவை நிகழ்வு கடந்த 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் சத்தியசோதி தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் ஓர் அங்கமாக ஜோடி ஒன்றிற்கு பதிவுத் திருமணம் செய்து வைக்கப்பட்டதுடன் - வறுமை நிலையில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கரநாற்காலியும் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.

நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன், சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் வ.ஶ்ரீபிரகாஷ், சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் பொ.குகதாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் மாவட்ட செயலக அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தர்கள், சாவகச்சேரி நகர, பிரதேச சபைகளின் உத்தியோகத்தர்கள், வைத்திய அதிகாரிகள், சாவகச்சேரி லயன்ஸ் கழகம் மற்றும் தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் ஆகியன மக்களுக்கான சேவைகளை வழங்கியிருந்தன.

இதன்போது ஆயிரக்கணக்கான பொதுமக்கள் சேவையினைப் பெற்று பயனடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-30)

# கிளி, முல்லை மாவட்டங்களில் 80 ஆயிரம் வெடிபொருட்கள் மீட்பு

(கண்டாவளை)

இலங்கையின் வட பகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஜப்பான் மற்றும் அமெரிக்கா நாட்டு நிதியுதவியுடன் ஈடுபடும் ஸார்ப் மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனமானது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2024 ஒக்டோபர் மாதம் வரையான காலப்பகுதியில் 36 இலட்சத்து 66 ஆயிரத்து 764 சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து 80 ஆயிரத்து 468 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தச்சடம்பன் அம்பகாமம், ஒலுமடு மற்றும் மாங்குளம், கொக்காவில் பகுதியிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் முகமாலை, கிளாலி, இயக்கச்சி மற்றும் ஆனையிறவிலும் தட்டுவன்கொட்டி பகுதியிலும் ஆபத்துமிக்க வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (க-8-315)


# INVITAION FOR BID 2025/03
# Zonal Education Office, Jaffna

1. The **Chairman, Regional Procurement Committee**, on behalf of the Zonal Director of Education, Zonal Education Office, Jaffna,Chemmani Road, Nallur, Jaffna invites sealed bids from eligible and qualified bidders for the Repairs works described in the table below. All projects will be funded via Line Ministry.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below. All the projects will be funded via Line Ministry.
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 Documents
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days **from 10/11/2025 to 24/11/2025 during 09:00 hrs and 15:00 hrs.**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Zonal Director of Education, Zonal Education Office, Jaffna. Chemmani Road, Nallur, Jaffna (T.P: 021 222 2647 / 021 222 2449, Fax:021 222 2449) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, **Regional Procurement Committee Zonal Education Office, Jaffna. Chemmani Road, Nallur, Jaffna on or before 10.30 a.m as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Zonal Education Office, Jaffna. Chemmani Road, Nallur, Jaffna** commencing at **10.30 A.M as stated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period. | From 10/11/2025 to 24/11/2025 |
| | Pre-Bid Conference | At 10.30 A.M on 2025-11-14 |
| | Closing and Opening of Bids | At 10.30 A.M on 25/11/2025 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| GROUP A | | | | | | | | |
| NP/41/20/1/3/Line Ministry/2025/01 | Renovation of Teacher Center at Jaffna Teacher Center | 2.8 | 30 | C9 or above (Buildings) | 2,000.00 | 28,000.00 | 10/02/2026 | 13/01/2026 |

**Chairman**
**Regional Procurement Committee,**
**Zonal Education Office,Jaffna.**
**Chemmani Road, Nallur,**
**Jaffna.**

(C-4278)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## மெக்சிக்கோ ஜனாதிபதியிடம் போதையில் அத்துமீறிய நபர்



மெக்சிகோவில் மக்களிடம் கலந்துரையாடிய ஜனாதிபதியிடம் போதையில் வந்த நபரொருவர் அத்துமீற முயன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மெக்சிகோ ஜனாதிபதி கிளாடியா ஷீன்பாம், தலைநகர் மெக்சிகோ சிட்டியில் கடந்த புதன்கிழமை வீதியில் இறங்கி, அங்கிருந்த பொது மக்களிடம் கலந்துரையாடி கொண்டிருந்தார்.

அதன்போது அங்கிருந்த போதையில் இருந்த அடையாளம் தெரியாத நபர் ஒருவர், கிளாடியா ஷீன்பாமை பின்புறம் கட்டியணைத்து முத்தமிட முயன்றதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

உடனடியாக ஜனாதிபதி சிரித்தபடி அங்கிருந்து நகர்ந்ததாகவும், பாதுகாவலர்கள் அந்த நபரை அகற்றிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான காணொளி தற்போது சமூக ஊடகங்களில் வைரலாகி வருகின்றது. இது தொடர்பாக கிளாடியா ஷீன்பாம் "பெண் என்ற ரீதியில் எனக்கு ஏற்பட்ட அத்துமீறல் தொடர்பாக குற்றச்சாட்டுகளை பதிவு செய்வேன்.


இதுபோன்ற அத்துமீறல்களை முன்னரும் சந்தித்துள்ளேன்.

இது என் மீதான தாக்குதல் மட்டுமல்ல. ஒட்டுமொத்த பெண்கள் மீதான தாக்குதல்" எனத் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து போதையில் அத்துமீறிய நபரை பொலிஸார் கைது செய்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (க-3)

## கல்விச் சீர்திருத்தத்திற்கு எதிர்ப்பு அரசுக்கு எதிராக மாணவர்கள் போராட்டம்

### பாகிஸ்தானில் பரபரப்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் காஷ்மீரில், கல்வி சீர்திருத்தம் மற்றும் கல்வி கட்டணத்தை குறைக்க வலியுறுத்தும் மாணவர்களின் போராட்டம் தீவிரமடைந்துள்ளது.

முன்னதாக, மாணவர்களின் இந்தப் போராட்டம், கடந்த ஒரு மாத காலமாக அமைதியாக மேற்கொள்ளப்பட்டு வந்தது.

எனினும் முசாபராபாத் நகரில், அடையாளம் தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கிச்சூடு நடத்தியதை தொடர்ந்து போராட்டம் தீவிரம் அடைந்ததாக அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதனைத் தொடர்ந்து போராட்டம் வன்முறையாக மாறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


சில இடங்களில் வாகனங்களை எரித்தும், பாகிஸ்தான் அரசுக்கு எதிராகவும் மாணவர்கள் கோஷம் எழுப்பியுள்ளனர்.

இந்த நிலையில், வேதனத்தை அதிகரிக்குமாறு கோரி ஆசிரியர்களும் குறித்த போராட்டத்தில் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-8)

# அன்பாக நடந்து

# இல்லையேல் பல

## நியூயோர்க் மேயர் மம்தா



(வோஷிங்டன்)
அமெரிக்க அ
அன்பாக நடந்துெ
அவ்வாறு நடந்து
யென்றால் அவர் நி
என அமெரிக்க ஜ
ட்ரம்ப் எச்சரித்துள்ள

அமெரிக்காவின் நியூயோர்க் நகர மேயர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட்ட இந்திய வம்சாவளியான சோஹ்ரான் மம்தானி தனது பதவியேற்பு விழாவில் டொனால்ட் ட்ரம்பை கடுமையாக விமர்சித்திருந்தார்.

அது தொடர்பில் கருத்துரைக்கும் போதே ட்ரம்ப் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மம்தானி தனது வெற்றி உரையின் போது பேசியது மிகவும் கோபமான பேச்சு" என்று நான் நினைக்கிறேன். அதில் நிச்சயமாக என் மீது அதிக கோபம் இருந்தது.

அவர் ஒரு மோசமான தொடக்கத்திற்குச் சென்றுவிட்டார்.

அவர் என்னிடம் மிகவும் நன்றாக இருக்க வேண்டும்

## பாதீட்டுக்கான அனுமதி கிடைக்காததால் நிர்வாக முடக்கம் ஏற்படும் அபாயம்

### நிதி நெருக்கடியில் அமெரிக்கா

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் அரச செலவினங்களுக்கான பாதீட்டுக்கு அனுமதி கிடைக்காததால், அரசு நிர்வாக முடக்கம் ஏற்பட்டு அந்நாட்டில் பலருடைய வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலை தற்போது 35ஆவது நாளைக் கடந்து சோகமான வரலாற்றை படைத்துள்ளது.

அமெரிக்காவிற்கு புதிய நிதியாண்டு ஒக்டோபர் முதலாம் திகதியுடன் ஆரம்பமானதையடுத்து இதற்கான பாதீட்டு சட்டமூலம் செப்ரெம்பர் 30 ஆம் திகதி பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

ஆனால், 60 வீதம் உறுப்பினர்களின் ஒப்புதல் கிடைக்காததால் குறித்த சட்டமூலம் தோல்வியடைந்தது.

இதனால் அரசின் முக்கிய துறைகள் அனைத்தும் முடங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

பணியாளர்கள் விடுப்பில் அனுப்பப்பட்டும் வேதனம் இல்லாமல் பணியாற்றும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் அமெரிக்காவின் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு இலவசமாக உணவுப் பொருட்களை வழங்கும் ஃபுட் ஸ்டாம்ப்ஸ் (Food stamps) திட்டமும் கைவிடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக, விமானப் போக்குவரத்தை 10 வீதம் குறைப்பதாக அந்நாட்டின் ஃபெடரல் ஏவியேஷன் அட்மினிஸ்ட்ரேஷன் (FAA) அறிவித்துள்ளது.

இப்படியொரு நிலை உருவாக அமெரிக்க எதிர்க்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளுங்கள்

# தை இழக்க நேரிடும்

## ானியை எச்சரித்த ட்ரம்ப்



அரசுடன் மம்தானி
கொள்ள வேண்டும்.
துகொள்ளவில்லை
றைய இழக்க நேரிடும்
ாதிபதி டொனால்ட்
ளார்.

என்று நான் நினைக்கிறேன். அவர் அமெரிக்க அரசுடன் அன்பாக நடந்துகொள்ள வேண்டும்.

மம்தானி ஒத்துழைக்கவில்லை என்றால் அவர் நிறைய இழக்க நேரிடும்.

"ஆயிரம் ஆண்டுகளாக, கம்யூனிசம் என்ற கருத்து வேலை செய்யவில்லை. இந்த முறை அது வேலை செய்யுமா என்று நான் சந்தேகிக்கிறேன்.

அது உண்மையில் ஒருபோதும் வேலை செய்யவில்லை.

நியூயோர்க்கில் கம்யூனிசத்தில் இருந்து தப்பி ஓடுபவர்களுக்கு விரைவில் புளோரிடா நகரம் அடைக்கலமாக இருக்கும்." என உணர்ச்சி பொங்கப் பேசினார்.

மம்தானியின் வெற்றி, அமெரிக்க அரசியலில் இரு துருவங்களுக்கிடையேயான மோதலை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-8)

கட்சிதான் காரணம் என ஆளும் ஜனநாயகக் கட்சியினர் கூறுகின்றனர்.


கிறிஸ்மஸ் போன்ற முக்கிய பண்டிகைகள் நெருங்கி வரும் சூழலில், இந்த நிலை அமெரிக்காவில் உள்ள மக்களை கடுமையாக பாதித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (க-8)



## சீன விண்வெளி வீரர்கள் பூமிக்குத் திரும்புவதில் சிக்கல்

(பீஜிங்)

சீன விண்வெளி நிலையத்தில் செயற்கைக்கோள் சிதறல்கள் மோதியதாக அஞ்சப்படுவதைத் தொடர்ந்து, அதில் பணியாற்றி வந்த மூன்று வீரார்கள் பூமி திரும்புவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.




அந்த விண்வெளி நிலையத்தில் ஆய்வுப் பணிகளுக்காக விண்வெளி வீரார்கள் குழுவை சீனா மாற்றி வருகிறது. இந்தச் சூழலில், புதிய குழு விண்வெளி நிலையத்தை ஷென்ஷு-21 விண்கலம் மூலம் சென்றடைந்துள்ளது.

அந்தக் குழுவிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, ஷென்ஷு-20 விண்கலம் மூலம் இன்று சனிக்கிழமை பூமி திரும்புவதாக இருந்தது.

இருந்தாலும், விண்வெளி நிலையத்தை உடைந்த செயற்கைக்கோள்களின் சிதறல்கள், பிற துகள்கள் தாக்கியிருப்பதாகச் சந்தேகிக்கப்படுவதை தொடர்ந்து வீரர்களின் பாதுகாப்புக்காக அவர்கள் பூமி திரும்பும் திட்டம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என சீனா தெரிவித்துள்ளது. (க-8)

## சரக்கு விமானம் விபத்து 12 பேர் பரிதாபப் பலி



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் தனியார் நிறுவன சரக்கு விமானம் விழுந்து நொருங்கியதில், தரையில் இருந்தவர்கள் உட்பட 12 பேர் உயிரிழந்துள்ளனர். இது குறித்து அதிகாரிகள் தெரிவித்ததாவது,

கென்டகி மாகாணம், லூயிஸ்வில் நகரிலுள்ள சர்வதேச விமானத்தில் இருந்து புறப்பட்ட யுபிஎஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான சரக்கு விமானம் புறப்பட்ட உடனேயே அருகில் உள்ள தொழிற்சாலை பகுதியில் விழுந்து நொருங்கியது.

மெக்டோனல் டக்ளஸ் எம்டி-11 ரகத்தைச் சேர்ந்த அந்த விமானம் புறப்படும் போது அதில் இருந்த ஒரு என்ஜின் கழன்று விழுந்தது. விமானம் தரையில் விழுந்ததும் அதில் தீப்பிழம்பு எழுந்து நெருப்பு வேகமாகப் பரவியது.

விபத்து ஏற்பட்டபோது அந்த விமானத்தில் 3 விமானப் பணியாளர்கள் உட்பட 6 பேர் இருந்தனர். அவர்களும், தரையில் இருந்த மேலும் 6 பேரும் விபத்தில் உயிரிழந்தனர். அவர்களில் ஒரு குழந்தையும் அடங்கும் என்று அதிகாரிகள் கூறினர்.

விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்றுவருகிறது. விமானத்தின் கருப்புப் பெட்டிகள் கைப்பற்றப்பட்டு ஆய்வுக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் இரண்டாவது பெரிய சரக்குப் போக்குவரத்து நிறுவனமான யுபிஎஸ் ஏர்லைன்ஸ் சந்தித்துள்ள மிக மோசமான விபத்து இதுவாகும். (க-8)

## தெருநாய்க்கடிக்கு இலக்கானவர்; இருபது இலட்சம் இழப்பீடு



(டில்லி)

இந்த ஆண்டு தொடக்கத்தில் தெரு நாய்களினால் கொடூரமாகத் தாக்கப்பட்ட பெண் ஒருவர் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும், நிதி ரீதியாகவும் ஏற்பட்ட அதிர்ச்சிக்காக டில்லி மாநகராட்சியிடம் ரூ.20 இலட்சம் இழப்பீடு கோரியுள்ளார்.

இந்த ஆண்டு மார்ச் மாதம் தெற்கு டில்லியின் மால்வியா நகரில் உள்ள கிர்கி கிராமசாலை அருகே மோட்டார் சைக்கிளில் பின்னால் பயணித்தபோது தான் தெரு நாய்களினால் தாக்கப்பட்டதாக பிரியங்கா ராய் டில்லி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டு, பாதிக்கப்பட்டவரின் பற்கள் கடித்த எண்ணிக்கை மற்றும் "தோலில் இருந்து சதை உரிந்துவிட்டதா" என்பதைப் பொறுத்து தொகை இருக்கும் என்று உயர் நீதிமன்றம் கூறியது.

ராய் மொத்தம் 12 செ.மீ காயத்திற்கு ரூ.12 இலட்சம் கோரியுள்ளார். 0.2 செ.மீ காயத்திற்கு ரூ.20 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்று உயர் நீதிமன்றம் முடிவு செய்தது.

உயர் நீதிமன்றம் நிர்ணயித்தபடி, ஒரு பல் அடையாளத்திற்கு ரூ.10 ஆயிரம் வீதம் கூடுதலாக ரூ.4.2 இலட்சம் வழங்க வேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

இந்த தாக்குதலில் நாயின் 42 பற்களும் பயன்படுத்தப்பட்டன என்று கூறி, ராய் தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடாக ரூ.3.8 இலட்சம் கேட்டுள்ளார், இதன்மூலம் அவரது மொத்த இழப்பீடு ரூ.20 இலட்சமாக உயர்ந்துள்ளது. (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் போதைப்பொருள் ஒழிப்பு
## மோப்ப நாய்களைப் பயன்படுத்தத் திட்டம்

**(கொழும்பு)** •••••••••••••••••••• **பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் போதைப்பொருள் சோதனை நடவடிக்கைகள் மற்றும் ஆய்வுகளுக்கு பொலிஸ் நாய்களின் உதவி தேவைப்பட்டால், தொடர்புடைய பாடசாலையின் அதிபர் இலங்கை பொலிஸ் நாய் பிரிவின் பணிப்பாளரை தொடர்பு கொண்டு தேவையான உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.**

நாட்டில் போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிக்கும் நோக்கில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பணிப்புரையின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் "முழு நாடுமே ஒன்றாக" தேசிய செயற்றிட்டத்தின் அடிப்படையில் பாடசாலைகளில் போதைப்பொருள் சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து, போதைப்பொருளை ஒழிக்க அனைத்து வழிகளிலும் பல்வேறு திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கு இலங்கைப் பொலிஸ் நேரடியாகப் பங்களிப்பு வழங்கும் எனவும் அந்தவகையில் பணிப்பாளர் : 071 859 1816, பொலிஸ் நாய் பிரிவு : 081 223 3429 என்ற தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-8)


# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1979- இந்து
நட்சத்திரம்: ரேவதி
10இல் சூரி செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc, MSc, Civil Engineer(London)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண். விவாகரத்தானவர்கள்
தொ.இ: B/15685

பிறப்பு:1985-இந்து
நட்சத்திரம்:திருவோணம்
1 இல் சூரிசெவ்
உயரம்:5'5"
தகைமை/தொழில்-A/L,கடை
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15688

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம்
கி-பா-33 1/4
உயரம்:6'2"
தகைமை/தொழில்:HNDE, Video Editor
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/15690

பிறப்பு: 1987- இந்து
நட்சத்திரம்:கார்த்திகை
உயரம்:5'4"
தகைமை/தொழில்: A/L, Sales Manager
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15692

பிறப்பு: 1988- இந்து
நட்சத்திரம்:மூலம்
கி-பா-29
உயரம்:5'9"
தகைமை/தொழில்: BBA, Business (own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15694

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி-பா- 6 1/2
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Dip in IT, Banker
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15502

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்-மூலம்
7இல்செவ்
கி-பா-15 1/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: CIMA, Senior Manager(pvt)
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15506

பிறப்பு-1990-இந்து
நட்சத்திரம்-ரோகினி
கி-பா-17
உயரம்: 5'4"
தகைமை/ தொழில்: Diploma, Teacher
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15664

பிறப்பு-1989-RC
நட்சத்திரம்-மிருகசீரிடம்
கி-பா-65
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L, Cleark
எதிர்பார்ப்பு: வெளிநாடு, அரச உத்தியோகம்
தொ.இ: G/15679

பிறப்பு-1993-RC
நட்சத்திரம்-உத்தரம்
உயரம்-5'3"
தகைமை/தொழில்: BFA,DO
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15669

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 478

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# ஆசையும் அதிகாரமும்!

ஒரு ஊரிலே ஒரு மன்னர் இருந்தார்.

அவர் பக்கத்து தேசத்து மேலே படையெடுக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டிருந்தார். அதையும் தன்னுடைய நாட்டோடு சேர்த்துக்கொள்ள வேண்டும் என ஆசை! எப்போது படையெடுக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தார்.

இப்படி யோசித்துக்கொண்டிருந்த சமயத்திலே ஒரு பெரியவர் அவரைத் தேடி வந்தார். அவர் அடிக்கடி வருவார். அவரிடம் பேசிக்கொண்டிருப்பார். இப்போதும் அப்படித்தான் வந்தார், "என்ன மன்னா யோசனை?" என்றார்.

இவர் தன்னுடைய யோசனையைச் சொன்னார்.

இந்த சமயத்திலே மன்னருக்குத் தாகம் எடுத்தது.

தண்ணீர் குடிக்க வேண்டும் போல இருந்தது. உடனே அங்கே இருந்த ஒரு அரண்மனை பணியாளரைக் கூப்பிட்டார்.

"போய் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா" என்றார். அந்தப் பணியாளர் சென்றார். ஒரு குவளையிலே தண்ணீர் கொண்டு வந்தார். ராஜாவிடம் நீட்டினார். ராஜா அதை வாங்கிக் குடிப்பதற்காக வாய்க்கு அருகில் கொண்டு சென்றார். அந்த நேரம் பார்த்து, "மன்னா! கொஞ்சம் பொறுங்கள்!" என்றார் இந்தப் பெரியவர்.

ஆவலோடு குடிக்கச் சென்ற மன்னர், அப்படியே நிறுத்திவிட்டு பெரியவரைப் பார்த்தார்.

அந்தப் பெரியவர் சொன்னார்.

"மன்னா! இப்போது உங்களைவிட வலிமையுள்ள ஒரு சக்தி உங்களுக்குத் தண்ணீர் கொடுக்க மறுத்துவிடுகிறது என்று வையுங்கள்.

உங்களைக் குடிக்கவிடாமல் தடுத்துவிடுகிறது என்றால் இப்போது இந்த ஒரு குவளை தண்ணீரை என்ன விலை கொடுத்து வாங்குவீர்கள்?" என்று கேட்டார்.

"இப்போது எனக்கு இருக்கின்ற தாகத்திற்கு என்னுடைய அரசாங்கத்திலே பாதியையாவது கொடுத்து இந்தத் தண்ணீரை வாங்கத் தயங்கமாட்டேன்!" என்றார் அவர்.

"சரி இப்போது அந்த த்ண்ணீரைக் குடியுங்கள்" என்றார் பெரியவர்.

மன்னர் ஆவலோடு அந்தத்தண்ணீரைக் குடித்து முடித்தார். அதன்பின் கொஞ்ச நேரம் தன்னுடைய படையெடுப்பைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்.

சிறிது நேரம் கழித்து மறுபடியும் இந்தப் பெரியவர் கேட்டார்.

"மன்னா! நீங்கள் ஒரு குவளை தண்ணீரை குடித்து முடிக்கிறீர்கள். இப்போது அந்தத் தண்ணீர் உங்கள் உடம்பை விட்டு வெளியிலே வரக்கூடிய பாதையில் அடைப்பட்டுப் போனது என்று வையுங்கள்.

அதை வெளியேற்றுவதற்கு நீங்கள் எவ்வளவு செலவழிப்பீர்கள்?" என்று கேட்டார். மன்னர் யோசித்தார்.

"அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டு போனது என்றால் என்னுடைய அரசாங்கம் முழுவதையும் அதற்கு ஈடாகத் தரவும் தயங்கமாட்டேன்!" என்றார். இப்போது அந்தப் பெரியவர் சொன்னார்.

"எந்த அரசாங்கத்தின் மதிப்பு ஒரு குவளை தண்ணீர் அளவுக்குக்கூட இல்லையோ? அந்த அரசாங்கத்தை அடைய வேண்டும் என்கிற பேராசையில் மனிதர்கள் தங்களுடைய சகோதரர்கள் கூடவே சண்டையிடுகிறார்களே. அதிலே ஏதாவது அர்த்தம் இருக்கிறதா?" என்றார்.

மன்னருக்கு இப்போதுதான் அர்த்தம் புரிந்தது.

மனதிலே தெளிவு உண்டானது. தன் மனதுக்குள்ளே உண்டான வெறியை விரட்டி அடித்துவிட்டார். அதன்பின் நிம்மதியாக ஆட்சி புரிந்தார்.

உயிருக்கு என்ன விலை? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

ஆனால் அது இப்போது எவ்வளவு மலிவாகப் போனது! அதையும் யோசித்துப் பாருங்கள். ஆசை பேராசையாக மாறுகிறது அதன்பின் அது வெறியாக மாறிவிடுகின்றது. அதன்பின் பைத்தியம் பிடிக்கிறது.

இந்தக் காலத்து மனிதர்களுக்கு இரண்டு விதமான பைத்தியம் பிடித்திருப்பதாக ஒரு பெரியவர் (சாய்பாபா) சொல்கிறார்.

ஒன்று - பணம், இன்னொன்று - அதிகாரம். இதெல்லாம் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும்.

ஒரு சர்வாதிகார நாட்டிலே மூன்று பேர் ஒரு சிறைச்சாலையின் இருட்டு அறையிலே பேசிக்கொள்கிறார்கள்.

"நீ எப்படி இந்த சிறைச்சாலைக்கு வந்தாய்?" என்று ஒருவர் கேட்டார்.

"இந்த நாட்டு ராஜாவை ஆதரித்து நான் பிரசாரம் செய்தேன். அதனாலே கூட்டத்திலே தகராறு வந்துவிட்டது. கலவரமாகிப் போனது! அதற்கு நான்தான் காரணம் என்று கைது செய்து கொண்டுவந்து விட்டார்கள்!" என்றார்.

"சரி நீ எப்படி இங்கே வந்தாய்?" என்று இவர் இன்னொருத்தரைப் பார்த்துக் கேட்டார்! "நான் இந்த நாட்டு ராஜாவை எதிர்த்துப் பிரசாரம் செய்தேன். அதனாலே கலவரம். கைது செய்து கொண்டுவந்து விட்டார்கள்!" என்றார்.

"சரி நீ எப்படி இங்கே வந்தாய்?" என்று மூன்றாவது ஆளைப் பார்த்து இவர் கேட்டார். இதற்கு அந்த ஆள் மெதுவாக வெளிச்சத்துக்கு வந்து, "நான் தான் இந்த நாட்டு ராஜா!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதான 30 இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை

(மன்னார்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த நிலையில், தலைமன்னார் கடற்பரப்பில் கடந்த மாதம் 30 ஆம் திகதி இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடித்த நிலையில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

பின்னர் குறித்த மீனவர்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த மீனவர்களின் விசாரணை நேற்று முன்தினம் வியாழக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெற்றது. இதன் போது குறித்த மீனவர்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது முதலாம் மற்றும் இரண்டாம் குற்றச்சாட்டுக்களுக்கு பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட தலா 12 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. மூன்றாவது குற்றச்சாட்டுக்கு 26 மீனவர்களுக்கு தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

ஏற்கனவே இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மன்றில் ஆஜர்படுத்தப்பட்டு நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டு இருந்த நிலையில் மீண்டும் கைது செய்யப்பட்ட 4 இந்திய மீனவர்களுக்கு மூன்றாவது குற்றச்சாட்டிற்காக தலா 2 லட்சத்து 75ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

மேலும் மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட நான்கு படகுகளின் உரிமையாளர்களையும் எதிர்வரும் மார்ச் மாதம் 19 ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மன்று உத்தரவிட்டது.

படகு தவிர்ந்த ஏனைய சான்றுபொருட்களை அரச உடமையாக்க நீதவான் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (3-285)


# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் |
| --- | --- | --- | --- | --- | --- |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 260 | 300 | 320 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 220 | 220 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 200 | 250 | 200 |
| தக்காளி | 200 | 200 | 200 | 250 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 280 | 150 | 200 |
| கோவா | 180 | 200 | 200 | 250 | 160 |
| கரட் | 220 | 260 | 250 | 350 | 250 |
| பூசணி | 80 | 80 | 100 | 100 | 50 |
| புடோல் | 200 | 250 | 200 | 300 | 140 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 150 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 200-300 | 300 | 350 | 155 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 150 | 200 | 155 |
| பாகற்காய் | 600 | 800 | 500 | 800 | 500 |
| வெண்டக்காய் | 180 | 200 | 200 | 200 | 140 |
| கருணைக் கிழங்கு | 300 | 220 | 250 | 250 | -- |
| பயற்றங்காய் | 250 | 250 | 150 | 200 | 200 |
| லீக்ஸ் | 280 | 250 | 250 | 350 | 200 |
| பீற்றூட் | 250 | 220 | 200 | 200 | 160 |
| கறிமிளகாய் | 600 | 450 | 500 | 800 | 700 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 250 | 400 | 350 |
| போஞ்சி | 500 | 450 | 600 | 600 | 380 |
| கத்தரிதம்புள்ள | 180 | 200 | 300 | 300 | -- |
| கீரை - 1 பிடி | 140 | 40-100 | 150 | 150 | -- |
| தேசிக்காய் | 1800 | 1400 | 1600 | 1200 | -- |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 150-200 | -- |
| இராசவள்ளி | 800 | 650 | 600 | 800 | -- |
| வெங்காயப்பூ | 600 | 300 | 600 | | -- |
| முள்ளங்கி | 160 | 160 | 150 | 200 | 160 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 150 | 60 | -- |
| வல்லாரை | 80 | 50 | 100 | 80 | -- |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 200 | -- |

# மன்னார் வைத்தியசாலையில் பல்வேறு சுகாதார சீர்கேடுகள்

## நகரசபை சுகாதாரக்குழு அதிரடி



(மன்னார்)

மன்னார் பொது வைத்தியசாலை சூழல் மற்றும் பொது வைத்தியசாலையின் கீழ் குத்தகை அடிப்படையில் இயங்கும் சிற்றுண்டி சாலையில் தொடர்சியாக பல்வேறு சுகாதார குறைபாடுகள் நிலவுவதாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய மன்னார் நகரசபை சுகாதார குழு உறுப்பினர்கள் மற்றும் நகரசபை சுகாதார பரிசோதகர் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கையின் போது பல்வேறு குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

குறிப்பாக மனிதக் கழிவுகள் சிற்றுண்டி சாலை வளாகத்தில் காணப்பட்டமை, கழிவு நீர், மலக்கழிவுகள் திறந்த பகுதியில் விடப்பட்டமை, அதிகளவான இலையான்கள், துர்நாற்றம், ஒழுங்கற்ற கழிவகற்றல், நுளம்பு பெருக்கத்துக்கு சாதகமான சூழல், கழிவு நீர் வாய்கால்களில் புழுக்கள், உணவு பொருட்கள் ஒழுங்கான முறையில் களஞ்சியப்படுத்தப்படாமை, அழுக்கான சமையலறை மற்றும் கழிப்பறை தொட்டிகள் மூடப்படாமை உள்ளடங்கலாக பல்வேறு குறைபாடுகள் இனங்காணப்பட்டது

இவ்வாறான நிலையில் குறித்த சிற்றுண்டிசாலைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதுடன் வைத்தியசாலை நிர்வாகத்திற்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-285)

# இராசிபலன்

08.11.2025
ஐப்பசி 22, சனிக்கிழமை
திருதியை பிற்பகல் 12.43 மணிவரை

மிருகசீரிடம் பின்னிரவு 4.01 மணிவரை
சுப நேரம் 3.05-4.35 மணிவரை
இராகுகாலம் 9.05-10.35 மணிவரை

சங்கடகர சதுர்த்தி விரதம்
சந்திராஷ்டமம்: விசாகம்

வளவன்




வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.




குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் செயற்படுவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.




புதிய முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், மறைமுகப் போட்டிகள் மாறும், கல்யானக் கனவுகள் நனவாகலாம்.




எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்று செய்து முடிப்பீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.




தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர்.




தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.




தொழில் முயற்சிகளில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், புண்ணிய காரியங்களுக்கு செலவிட்டு மகிழ்வீர்கள், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.




வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வுடன் நடந்து கொள்வது நல்லது.




பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், தொழில் போட்டிகள் மாறும், வர வேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.




இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.




உடன் பிறப்புக்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.

அன்பு இருக்குமிடம் சொர்க்கம் அன்புமறையும் இடம் நரகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 904





மீண்டும் பழையபடி அமைதி ஏற்பட்டது. கீழ் திசையில் வான்முகட்டில் அருணோதயத்துக்கு அறிகுறி தென்பட்டது. சிறிது நேரத்துக்கெல்லாம் தங்கச் சூரியன் உதயமானான். கடலின் நீரும் பொன் வண்ணம் பெற்றுத் தகதகா மயமாகத் திகழ்ந்தது.

சற்று தூரத்தில் பசுமையான தென்னந் தோப்புக்கள் சூழ்ந்த தீவுகள் சில தென்பட்டன. அத்தீவுகளிலிருந்து புள்ளினங்கள் மதுரமான குரல்களில் இசைத்த கீதங்கள் எழுந்தன. ஈழ நாட்டின் கரையோரமுள்ள தீவுகள் அவை என்பதைச் சுந்தர சோழர் உணர்ந்து கொண்டார். அவற்றில் ஒரு தீவிலேதான் முந்தைப் பிறவியில் அவர் மந்தாகினியைச் சந்தித்தார் என்பது நினைவு வந்தது.

அந்தத் தீவின் பேரில் பார்வையைச் செலுத்திக் கொண்டே "பூங்குழலி! கடைசியில் என்னைச் சொர்க்கலோகத்துக்கே கொண்டு வந்து சேர்த்து விட்டாயல்லவா? உனக்கு நான் எவ்விதத்தில் நன்றி செலுத்தப் போகிறேன்?" என்றார். பூங்குழலி மறுமொழி சொல்லாதது கண்டு அவள் பக்கம் திரும்பிப் பார்த்தார் அப்படியே ஸ்தம்பிதமாகிவிட்டார்.

ஏனெனில், படகில் இனனொரு பக்கத்தில் இருந்தவள் பூங்குழலி இல்லை. அவள் மந்தாகினி! முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் எப்படி இருந்தாளோ, அப்படியே இன்றும் இருந்தாள்!

சில நிமிஷ நேரம் திகைத்திருந்து விட்டு, "மந்தாகினி நீதானா? உண்மையாக நீதானா? பூங்குழலி மாதிரி மாற்றுருவம் கொண்டு என்னை அழைத்து வந்தவள் நீதானா?" என்றார். தாம் பேசுவது அவளுக்குக் காது கேளாது என்பது நினைவு வந்தது. ஆயினும் உதடுகளின் அசைவிலிருந்து அவர் சொல்வது இன்னதென்பதை அறிந்து கொண்டவள் போல மந்தாகினி புன்னகை புரிவதைக் கண்டார். அவள் அருகில் நெருங்கிச் செல்வதற்காக எழுந்து செல்ல முயன்றார். ஆனால் அவரால் எழுந்திருக்க முடியவில்லை. தம் கால்கள் பயனற்றுப் போயின என்பது நினைவு வந்தது.

"மந்தாகினி! நான் நோயாளியாய்ப் போய் விட்டேன். உன்னிடம் என்னால் வர முடியவில்லை நீதான் என் அருகில் வரவேண்டும். இதோ பார் மந்தாகினி! இனி ஒரு தடவை மூன்று உலகத்துக்கும் சக்கரவர்த்தியாக முடிசூட்டுவதாய் என்னை யாரேனும் அழைத்தாலும் நான் உன்னை விட்டுப் போகமாட்டேன். இந்த ஈழ நாட்டுக்கு அருகிலுள்ள தீவுகளுக்கு நாம் போக வேண்டாம். இங்கே யாராவது வந்து கொண்டே இருப்பார்கள். படகை நடுக்கடலில் விடு! வெகுதூரம், தொலைதூரம், ஏழு கடல்களையும் தாண்டிச் சென்று அப்பால் உள்ள தீவாந்தரத்துக்கு நாம் போய்விடுவோம்!" என்றார் சுந்தர சோழர். அவர் கூறியதையெல்லாம் தெரிந்து கொண்டவள் போல் மந்தாகினி புன்னகை புரிந்தாள்.


காவேரி நதியில் இராஜஹம்ஸத்தைப் போல் அலங்கரித்த சிங்காரப் படகில் சுந்தர சோழ சக்கரவர்த்தியும் அவருடைய பட்டத்து ராணியும் குழந்தைகளும் உல்லாசப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள்.

தொடரும்...



# சிறுவர் அரங்கம்

## கரும்பாயிரத்தின் கவலை!



கரும்பாயிரத்துக்கு ஜோசியத்தில் தீவிர நம்பிக்கை உண்டு. அதனால் தன் ஜாதகத்தை ஜோசியம் தெரிந்தவர்களிடம் தவறாமல் காட்டுவான். தன்னுடைய எதிர்காலத்தை பற்றி அவர்கள் சொல்வதை கவனமாக கேட்டு குறித்துக் கொள்வான். அவர்கள் சொல்லிய படி தான் நடக்கும் என்ற அசைக்க முடியாத எண்ணம் அவன் மனதில் வந்துவிட்டது. பிரபல ஜோசியர் ஒருவர் அவன் ஊருக்கு ஒரு முறை வந்திருந்தார். அந்த செய்தியை கேள்விப்பட்டவுடன் தன் ஜாதகத்தை எடுத்துக் கொண்டு அவரிடம் ஓடினான் கரும்பாயிரம். அவனிடமிருந்து இருநூறு ரூபாய் வாங்கிக் கொண்டு அவன் எதிர்காலத்தை பற்றிய சில முக்கியமான தகவல்களை கூறினார்அந்த ஜோசியர். எதிர்கால பலன்களை ஜோசியர் சொல்லக் கேட்ட கரும்பாயிரம் இடிந்து போய் உட்கார்ந்து விட்டான். அடுத்த இரண்டு வருடங்களுக்கு அவனுக்கு பயங்கரமான கஷ்ட காலம் தான். அதற்கு பரிகாரம் ஏதாவது உண்டா என்று அவரிடம் கேட்ட போது, "நீ கஷ்டப்பட்டு தான் ஆக வேண்டும். வேறு வழியில்லை," என்று கை விரித்து விட்டார் ஜோசியர். அதற்கு பின் எதுவும் செய்ய தோன்றாமல் சோர்ந்து போனான். வாடிப் போன முகத்துடன் நீண்ட நேரம் சென்று வந்த கரும்பாயிரத்தை, அவன் மனைவி கண்ணம்மா சிரித்த முகத்துடன் வரவேற்றாள். கண்ணம்மா! இனிமேல் நமக்கு கஷ்ட காலம் தான். உன் முகத்தில் இந்த சிரிப்பு இனிமேல் இருக்குமா என்பது சந்தேகம்தான்!" என்று விரக்தியுடன் சொல்லிவிட்டு, வீட்டின் ஒரு மூலையில் போய் உட்கார்ந்து கொண்டான்.

"என்னங்க! அந்த ஜோசியர் ஏதாவது சொல்லிவிட்டாரா? உங்களை பிடிச்சிருக்கும் இந்த ஜோசிய பைத்தியம் என்னிக்குத்தான் போகுமோ? அப்படியே கப்பல் கவுந்த மாதிரி கன்னத்தில் கை வைச்சுட்டு உட்காராதீங்க. நாளைக்கு வேலைக்கு போகணும். படுத்து உறங்கினா கவலையெல்லாம் தன்னால் பறந்து போய் விடும்." என்று கணவனுக்கு ஆறுதல் சொன்னாள்.

"கண்ணம்மா! ஒருத்தனுடைய ஜாதகப்படி தான் எல்லாம் நடக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரது பாராட்டுக்கும் பழிக்கும் செவி சாய்த்தால் மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது.
– சுவாமி விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www:valampurii.lk

## 2026ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டம்

2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நேற்று(07) ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவால் பாரர்ளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

நிதியமைச்சர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி அநுரவால் சமர்ப்பிக்கப்பட்ட 2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் குறித்த விமர்சனங்களை, அடுத்து வரும் நாட்களில் நாம் எதிர்பார்க்க முடியும்.

வரவு செலவுத் திட்டம் எவ்வளவுதான் உச்சமாக இருந்தாலும் அதனைத் தோலுரித்துத் தொங்க விடுவதில் எதிர்க்கட்சியினர் முனைப்பாக இருப்பர் என்பது தெரிந்த விடயம்.

எதுவாயினும் அநுர அரசாங்கத்தின் இரண்டாவது வரவு செலவுத் திட்டம் இது.

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 2024ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்க வேண்டுமாயினும் தேர்தல் அறிவிப்புகள் காரணமாக 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 2025 இலேயே வாசிக்கப்பட்டது.

அந்த வரவு செலவுத் திட்டத்தை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

இப்போது 2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நேற்று 2025 நவம்பர் 7ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் குறித்த திறனாய்வுகள் முன்வரவுள்ள நிலையில், பொதுநிலையில் நின்று வரவு செலவுத் திட்டத்தை நோக்குவோமாயின், 2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை 2025 நவம்பர் மாதம் 7ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருப்பது இங்கு முதன்மைக்குரிய விடயமாகும்.

ஆம், 2025ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தை 2025ஆம் ஆண்டில் தயாரித்து வழங்கிய நெருக்கடியான நிலையில் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைக் காலதாமதம் எதுவுமின்றி நவம்பர் மாத முற்பகுதியில் தயாரித்து வழங்குவதென்பது உண்மையில் பாராட்டப்பட வேண்டிய விடயம்.

இதற்காக வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கின்ற குழாம் கடுமையாகப் பாடுபட்டுள்ளமை தெரிகிறது.

அதாவது அநுரவின் அரசாங்கம் எதிலும் மிகவும் தீவிரமாக உள்ளதென்ற உண்மை இதனூடு வெளிப்படுகின்றது எனலாம்.

தவிர, அநுர அரசின் நிர்வாகக் கட்டமைப்பானது, கடமைகளை உதாசீனம் செய்யாமல் – காலம் கடத்தாமல் உடனடியாகச் செய்து முடிப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறது என்ற உண்மையும் குறித்த காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தினூடு உறுதியாகிறது.

இதனை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் விரைவாக வெளியிடப்பட்டமையும் சான்றுப்படுத்தும்.

தவிர, நேற்றைய தினம் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் மிக ஆழ்ந்து அகன்று ஆராய்ந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

அதில் துறைசார் நிபுணர்களினதும் அனுபவஸ்தர்களினதும் வகிபாங்கு இழையோடியிருப்பது உறுதியாகிறது என்பதையும் நாம் இங்கு கூறித்தானாக வேண்டும்.

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் நாட்டை ஒருபோதும் முன்னேற்ற முடியாது

## அநுர அரசுக்கு சிறீதரன் இடித்துரைப்பு

நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய முடியாது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் இடித்துரைத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (07) சமர்ப்பிக்கப்பட்ட 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் ஒரு சம்பிரதாயமான சடங்காகவே உள்ளது.

நாட்டின் மிக முக்கிய பிரச்சினையான இனப்பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி எந்த ஒரு தீர்வையும் முன்வைக்கவில்லை.

பதவிக்கு வருவதற்கு முன் தமிழ் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் தொடர்பில் ஜனாதிபதி எதுவும் சொல்லவில்லை.

தமிழ் மக்களின் காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை என எந்த ஒரு விடயமும் இதில் உள்ளடக்கப்படவில்லை.

ஆசிய வங்கி உள்ளிட்ட வெளிநாட்டு வங்கிகளில் கடன் பெற்று அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதாகக் கூறுகின்றபோதும், அவ்வாறு பெறும் கடன்களை அடைக்கப் போகும் விதம் தொடர்பில் தெளிவு இல்லை.

இந்தக் கடன் சுமை மக்களின் தலைகளில் தான் சுமத்தப்படும்.

ஆக ஒட்டுமொத்தத்தில் இந்த வரவு செலவுத் திட்டம் ஓர் வெற்று வரவு செலவுத் திட்டம் இது ஒரு அரசாங்கத்தின் வழமையான வருடாந்த சடங்கு மாத்திரமே என்றார். (ம-7)

## மோ.சைக்கிள் - கெப் விபத்து இஸ்ரேலியப் பிரஜை படுகாயம்

நாவலப்பிட்டி - கண்டி பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இஸ்ரேலிய பிரஜை ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நாவலப்பிட்டி மல்லாந்த சந்தியில் நேற்று வெள்ளிக்கிழமை (07) பிற்பகல் 2.30 மணியளவில் குறித்த இஸ்ரேலியப் பிரஜை பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து கெப் வண்டியுடன் மோதியதில் இவ்விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த இஸ்ரேலியப் பிரஜை நாவலப்பிட்டி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

நாவலப்பிட்டி பொலிஸார் விபத்துத் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

### பருத்தித்துறை பிரதேச சபையின்

## வரவு - செலவுத் திட்டம் பொதுமக்கள் பார்வைக்கு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 19ம் திகதி வரை பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்படும் என பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளர் உ.யுகதீஸ் அறிவித்துள்ளார்.

அதன் பிரகாரம் குறித்த காலப்பகுதியில் தலைமை அலுவலகத்திலும் புலோலி குடத்தனை செம்பியன்பற்று பிரதேசங்களிலுள்ள உப அலுவலகங்களிலும் பருத்தித்துறை பிரதேச சபையின் பொது நூலகங்களிலும் மக்கள் பார்வையிட்டு தங்கள் அபிப்பிராயங்களை எழுத்து மூலம் சபைக்கு அறிவிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கலைஞனின் குரல் மாதாந்த வெளியீடு

(யாழ்ப்பாணம்)

முத்தமிழ் கலைஞர் மேம்பாட்டு மன்றத்தின் கலைஞரின் குரல் மாதாந்தப் பத்திரிகை வெளியீடானது இன்று (08) சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில் மன்றத் தலைவர் இரா.மதிகரன் தலைமையில் முத்தமிழ் கலைஞர் மேம்பாட்டு மன்றப் பிராந்திய செயலகத்தில் இடம்பெறவுள்ளது. (ம-7)

## தென்மராட்சி இலக்கிய அணியின் பாரதி விழா நாளை

(சாவகச்சேரி)

தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும் பாரதி விழா நாளை 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் சாவகச்சேரியில் உள்ள தென்மராட்சி கலைமன்றத்தில் இடம்பெறும்.

வலி.தெற்கு பிரதேச செயலர் திருமதி பிரேமினி பொன்னம்பலம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், தென்மராட்சி இலக்கிய அணியின் பெருந் தலைவர் அமரர் கவிஞர் நாகேஸ்வரன் அவர்களுக்கான அஞ்சலி நிகழ்வு இடம்பெறும்.

அஞ்சலியுரையை கம்பநேசன் அ.வாசுதேவா நிகழ்த்துவார்.

தொடர்ந்து கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில், பாரதியிடமிருந்து இன்றைய அரசியலாளர்கள் கற்றுக் கொள்ள வேண்டியது; இனப்பற்றையே! தேசப்பற்றையே! என்ற தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெறும். (ந)

## பருத்தித்துறையில் கனமழை நான்கு குடும்பங்கள் பாதிப்பு

பருத்தித்துறைப் பகுதியில் நேற்று (07) வெள்ளிக்கிழமை அதிகாலை முதல் பெய்த கனமழை காரணமாக நான்கு குடும்பங்கள் பாதிக்கப்பட்டன.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட J/400 கிராம சேவையாளர் பிரிவில் திக்கம் பகுதியில் தற்காலிக குடியிருப்புகளில் தங்கியிருந்த நிலையில் கூரை வழியே மழை நீர் உட்புகுந்ததால் இப்பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக கிராம சேவகர் ஊடாகத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தறப்பாள்கள் வழங்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ந.திரு லிங்கநாதன் தெரிவித்துள்ளார். (ம-7,60)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 01 - 30, 2025

'பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும்போது பூமியிலுள்ள மிகச்சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றைக் கொண்டிருப்போம்'



பிராங்க் லோயிற் றைற் (அமெரிக்க கட்டடக் கலைஞர், எழுத்தாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவம்பர் மாத இராசி பலன்கள்-2025

## பணவரத்து அதிகரிக்கும்!



**கிரகநிலை -** ராசியில் சனி (வ), ராகு - ரண ருண ரோக ஸ்தானத்தில் குரு - களத்திர ஸ்தானத்தில் கேது - அஷ்டம ஸ்தானத்தில் சுக்கிரன் - பாக்கிய ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ) - தொழில் கர்ம ஸ்தானத்தில் செவ்வாய் என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** இந்த மாதம் நீண்ட நாட்களாக தடைபட்ட காரியத்தை செய்து முடிப்பீர்கள். மனதில் சஞ்சலம் ஏற்பட்டாலும் அதிஷ்டம் உண்டாகும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருந் தாலும் கொள்கைக்காக பாடு படுவீர்கள். அதிகம் பேசுவதை தவிர்ப்பது நல்லது. அடுத்தவர் சொல்வதை நம்பும் முன் அதைப் பற்றி ஆலோசனை செய்வது நல் லது. தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் ஒரே குறிக்கோளுடன் இருப்பதை விட்டு வாடிக்கையாளர் தேவை அறிந்து செயற்படுவது முன்னேற்றத்திற்கு உதவும். பண வரத்து அதிக ரிக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவ ர்கள் துணிச்சலாக வேலைகளை செய்து வெற்றி பெறுவார்கள். சக ஊழியர்களுக்கு மேல் அதிகாரி களால் நன்மையும் உண்டாகும். கணவன், மனைவிக்கு இடையே இருந்த கருத்து வேற்றுமை குறைந்து நெருக்கம் அதிகரிக்கும். வாழ்க்கை துணையின் ஆதரவு இருக்கும். பொருளாதார முன் னேற்றம் உண்டாகும்.

புதிய நபர்களின் நட்பு கிடை க்கும். பெண்கள் அதிகம் பேசுவதை தவிர்த்து செயலில் வேகம் காட்டுவது நல்லது. மாணவர்கள் கல்வியில் முன் னேற்றமடைய கூடுதல் கவ னத்துடன் படிப்பீர்கள். ஆசிரியர், சக மாணவர் மத்தியில் நன்மதிப்பு உண்டாகும்.

**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் தொழில் வியாபாரம் நன்கு நடக்க தேவை யான உதவிகள் கிடைக்கும். வாடிக்கையாளர் தேவை அறிந்து பொருள்களை அனுப்பி அவர்க




ளின் நன்மதிப்பை பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக பணிகளை செய்து முடித்து நிர்வாகத்தில் நல்ல பெயர் பெறுவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். கணவன் மனைவிக்கு இடையே இருந்த பிரச்சினைகள் தீரும். பிள்ளைகள் விரும்பும் பொருள்களை வாங்கி கொடுத்து அவர்களை மகிழ்ச்சி அடைய செய்வீர்கள்.

**சதயம்:** இந்த மாதம் வீடு, வாகனம் போன்றவற்றை வாங்கு வது, புதுப்பிப்பது போன்றவற்றில் ஈடுபடுவீர்கள். பெண்களுக்கு இழுபறியாக இருந்த வேலைகள் சாதகமாக நடந்து முடியும். மனம் மகிழும்படியான சம்பவங்கள் நடக்கும். கலைத்துறையினருக்கு மிகவும் அனுகூலமான காலம் இது. வாய்ப்புகள் குவியும். புத்தி சாதுர்யத்துடன் கையாள்வதால் லாபமான காலமாக அமைய க்கூடிய வாய்ப்பு உண்டு.

**பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் அரசியல்வாதிகளுக்கு இனிமை யான செய்திகள் தேடி வரும். நீண்ட நாளாக எதிர்பார்த்த உதவி கிடைக்கப்பெறுவீர்கள். புதிய நண்பர்களால் தேவையில்லாத பிரச்சினைகள் உண்டாகும் வாய்ப் புகள் இருப்பதால் கவனமுடன் இருப்பது நல்லது. மாணவர்கள் சக மாணவர்களை அனுசரித்து செல்வது நன்மை தரும். கல்வி யில் ஆர்வம் உண்டாகும்.

**பரிகாரம்:** அம்மனை வண ங்குவது மூலம் நன்மை உண் டாகும்

**சந்திராஷ்டம தினங்கள்:** 16, 17

**அதிஷ்ட தினங்கள்:** 25, 26, 27

## மனதில் தைரியம் உண்டாகும்!



**கிரகநிலை -** பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் குரு - ரண ருண ரோக ஸ்தானத்தில் கேது - களத்திர ஸ்தானத்தில் சுக்கிரன் - அஷ்டம ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ) - பாக்கிய ஸ்தானத்தில் செவ்வாய் - அயன சயன போக ஸ்தானத்தில் சனி (வ), ராகு என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** இந்த மாதம் எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். முதலீடுகளில் அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. மனதில் தைரியம் உண் டாகும். வீண் வாக்கு வாதங்க ளால் பகையை வளர்த்துக் கொள் ளாமல் பார்த்துக் கொள்வது நல் லது. தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் சாதுரியமான பேச் சின் மூலம் தங்களது வியாபா ரத்தை லாபகரமாக செய்வார்கள். தேவையான பண உதவியும் கிடைக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்க ளுக்கு அதிக உழைப்பும் அதற் கேற்ற பலனும் உண்டாகும். எதிர் பார்ப்புகளை குறைத்துக் கொள்வது நன்மை தரும். குடும்பத்தில் கல கலப்பு உண்டாகும்.

விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய கவலை ஏற்பட்டு நீங்கும். அயலவர்களிடமும் உற வினர்கள், நண்பர்களிடம் விவா தங்களை தவிர்ப்பது நல்லது.

முயற்சிகளில் சாதகமான பலன் உண்டாகும். கணவன் மனைவி க்கு இடையே மகிழ்ச்சி நிலவும். பெண்களுக்கு மனதில் தைரியம் உண்டாகும். அவசர முடிவுகளை தவிர்ப்பது நல்லது. மாணவர்க ளுக்கு கல்வியில் வெற்றி பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும்.

**பூரட்டாதி 4 ஆம் பாதம்:** இந்த மாதம் எல்லா வசதிகளும் உண்டாகும். [illegible] கியம் பெறுவீர்கள். மனதில் தைரியமும், தன்னம்பிக்கையும் பிறக்கும். தாயின் உடல் ஆரோ க்கியத்தில் கவனம் தேவை.

நண்பர்கள், உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.




தந்தையுடன் மனஸ்தாபம் ஏற்படலாம். எதிர்பாராத காரிய தடைகள் வரும். வாகனங்களில் செல்லும் போது மிகவும் கவனம் தேவை.

**உத்திரட்டாதி:** இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் சுமாரான போக்கு காணப்படும். புதிய ஓடர்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட லாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நம்பிக்கையுடன் செயலாற்றுவதன் மூலம் நன்மை அடைவார்கள். அலுவலக பணிகளில் தாமதம் ஏற்படலாம். குடும்பத்தினருக்கு தேவையான பொருட்களை வாங் குவீர்கள். கணவன், மனைவிக்கு இடையே ஒற்றுமை காணப்படும். பிள்ளைகளின் கல்வி அவர்களது செயல்களில் கவனம் செலுத்து வீர்கள்.

**ரேவதி:** இந்த மாதம் பெண்களுக்கு எதிலும் எதிர்பாராத தடைகள் உண்டாகலாம். தன் னம்பிக்கையுடன் செயற்பட்டு காரிய வெற்றி அடைவீர்கள்.

கலைத்துறையினருக்கு நீண்ட நாட்களாக இருந்த மன அழுத்தம் நீங்கும்படியான சூழல் உரு வாகும். உடனிருப்பவர்களின் ஒத்துழைப்பு இருக்கும். எனினும் கவனமுடன் செயற்படுவது நன்மை தரும்.

**பரிகாரம்:** சாய் பாபாவை வணங்க எல்லா நன்மைகளும் உண்டாகும்

**சந்திராஷ்டம தினங்கள்:** 18, 19

**அதிஷ்ட தினங்கள்:** 01, 02, 28, 29 ;

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

சேர்ந்த உதயகுமார் சாருஜன் (வயது-25) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞனும் அவரது நண்பரும் கொழும்பில் இருந்து முச்சக்கரவண்டியில் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த வேளை, யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில், பெரியகுளம் பகுதியில் வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த இருவரும் படுகாயமடைந்த நிலையில், மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் குறித்த இளைஞன் உயிரிழந்துள்ளார். மற்றைய இளைஞன் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்துத் தொடர்பில் கனகராயன் குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33)

## முல்லையில்...

இச்சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த வீரசிங்கம் (வயது-75) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று அதிகாலை சுமார் 2.45 மணியளவில் நித்திரையால் விழித்த குறித்த நபர் மனைவியைக் கோடரியால் தாக்கிவிட்டு வீட்டின் பின்புறத்திலுள்ள கிணற்றில் குதித்து உயிரிழந்துள்ளார்.

கோடரியால் தாக்கப்பட்டதில் படுகாயமடைந்த குறித்த நபரின் மனைவி மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குறித்த நபர் அண்மையில் மனநிலை பாதிக்கப்பட்டிருந்தவர் என அயலவர்கள் தெரிவித்தனர். (ம-7,299)

## மூன்று சிசுக்...

பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி வதிரிப் பகுதியைச் சேர்ந்த யோகராசா மயூரதி (வயது-46) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த பெண்ணுக்கு, திருமணமாகி கடந்த 20 வருடங்களாகக் குழந்தைகள் இல்லை. இந்த வருடம் கர்ப்பம் தரித்த நிலையில், கடந்த மாதம் 07ஆம் திகதி ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்திருந்தார்.

அதனையடுத்து அவரது உடல் நிலை மோசமானதைத் தொடர்ந்து கடந்த ஒரு மாத காலமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பிறந்த மூன்று குழந்தைகளும் ஆரோக்கியமாக இருப்பதாகவும் உயிரிழந்த பெண்ணின் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னரே மரணத்திற்கான காரணத்தைக் கூற முடியும் எனவும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7,33,104,60)

## மஹாபொல...

அறிவித்துள்ளார்.

நேற்றுப் பாராளுமன்றத்தில் நடைபெற்ற 2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட உரையின் போதே ஜனாதிபதி இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், மஹாபொல உள்ளிட்ட கொடுப்பனவுகளுக்காக 2,500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச்சேர்ந்த மாணவர்களின் உயர் கல்விக்காக மஹாபொல கொடுப்பனவு 10,000 ரூபாயுடன் மேலதிகமாக 5000 ரூபாய் வழங்கப்படும்.

2026ஆம் ஆண்டு முதல் மஹாபொல 10,000 ரூபாய் வரை அதிகரிக்கப்படும். தேசிய கல்வியற் கல்லூரிகளில் பயிலும் ஆசிரிய மாணவர்களுக்கான கொடுப்பனவு 2,500 ரூபாயினால் அதிகரிக்கப்படும்.

விசேட தேவையுடைய பிள்ளைகள் உயர்கல்வியைப் பெறுவதற்காக 5,000 ரூபாய்மாதாந்தக் கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நாடளாவிய ரீதியில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கு 8,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும் எனத் தெரிவித்தார். (ம-7)

## வடக்கு, கிழக்கில்...

பட்ட 2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட உரையின்போதே ஜனாதிபதி இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "வீட்டுப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் சகல தரப்பினர்களையும் உள்ளடக்கியதாக புதிய அணுகுமுறைக்கு அமைய, தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடுகள் அடங்கலாக 27,000 புதிய வீடுகளின் கட்டுமானப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் வீட்டு வசதிப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக, அடுத்த ஆண்டு முதல் "தமக்கெனதோர் இல்லம் - அழகான வாழ்க்கை" வீட்டுவசதி நிகழ்ச்சித் திட்டம் கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தப்படும்.

நடுத்தர காலத்தில் 70 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்க, 2026 இல் 10,000 வீடுகளை நிர்மாணிப்பதற்காக தற்போது ஒதுக்கப்பட்டுள்ள 7,200 மில்லியனுக்கு மேலதிகமாக மேலும் 3,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ம-7)

## துண்டு...

சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வழக்கமான தேநீர் விருந்துபசாரம் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி மற்றும் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அழைப்பாளர்கள் பங்கேற்புடன் நடைபெற்றது.

வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இன்று (08) ஆரம்பமாகி நவம்பர் 14ஆம் திகதி வரை தொடரும். இரண்டாம் வாசிப்பு வாக்கெடுப்பு நவம்பர் 14ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதன்பின், வரவு செலவுத் திட்டம் மீதான மூன்றாம் வாசிப்பு அல்லது குழுநிலை விவாதம் நவம்பர் 15 முதல் டிசம்பர் 05 வரை நடைபெறும். மேலும், வரவு செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு டிசம்பர் 05ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஊடகவியலாளர்...

வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், சீன உதவியுடன் கட்டப்பட்டு வரும் வீட்டுத் திட்டத்தில் ஊடகவியலாளர்களுக்கு வீடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் ஊடகவியலாளர்களின் திறன்களை மேம்படுத்த 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்றார். (ம-7)













































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்தில் Voyzant

விசாக்கள்

இந்தியா, அமெரிக்கா, கனடா, லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி, நோர்வே, கொலன்ட், டென்மார்க், பெல்ஜியம், மலேசியா, நியூஸ்லாந்து, அவுஸ்திரேலியா, சீனா போன்ற நாடுகளிற்கு விசா சேவைகள்

மேலதிக விபரங்களுக்கு: Voyzant(PVT)Ltd

No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(OLR Church இற்கு அருகில்)
+94763458646, 021 222 6866

(5725)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 196/= | Max 3Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 224/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 258/= | |
| 1Kg பிறிமா கோதுமை மா | - 150/= | Max 5Kg |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 237/= | |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 210/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 255/= | |
| 10Kg விஜிதா நாடு அரிசி | - 2690/= | Max 01 |
| 1Kg பயறு | - 730/= | |
| 1Kg உளுத்தம் பருப்பு | - 975/= | |
| 1Kg கறுப்பு கௌபி | - 1290/= | |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= ~~70~~ | |

MAX 03 ~~1200~~ 1135 400g Anchor

~~320~~ 280 1Kg சவர்க்கார தூள் Sunlight 2in1

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்.

(5695)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30

## உடன் விற்பனைக்கு

- யாழ். ஆஸ்பத்திரி வீதியில் SVM களஞ்சியசாலைக்கு முன்பாக 15 அடி அகலமும் 30 அடி நீளமும் கொண்ட கடையும்
- யாழ். கஸ்தூரியார் வீதியில் கபிலா பாட்டாவிற்கு அண்மையில் 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட தனிக் கடையும்
- யாழ். மானிப்பாய் வீதியில் ஈழநாடு காரியாலயத்திற்கு முன்பாக 6 பரப்புக் காணியும்
- யாழ். ஒஸ்மேனியா கொலிஜிற்கு அண்மையில் ஒஸ்மேனியா வீதி முகப்புடன் 6 1/2 பரப்பில் அமைந்த காணியும் வீடும் உடன் விற்பனைக்கு உண்டு.

(C-4281)

0777 23 25 35

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)

சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

(C-4285)

V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com

## கனடா - வரி இல்லாமல்

விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3710/- |
| 11-16 Kg | 2640/- |
| 21-27 Kg | 2430/- |

- குறைந்த விலை - நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-4285)

UK 11Kg - 1390/- France 11Kg - 2160/- Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2500/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2280/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

## பணியாளர்கள் தேவை

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் அமைந்துள்ள கடதாசி உற்பத்தி மற்றும் பொதியிடும் நிறுவனத்திற்கு பின்வரும் பணிநிலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- தொழிற்சாலை பணியாளர் பணிநிலை வேண்டுகை
  1. Packing Assistant (பொதி செய்பவர்)
  Full Time and Part Time
- அடிப்படைத் தகுதிகள்
  - 01.11.2025 இல் 18 வயதிற்கு மேற்பட்டவராயிருத்தல் வேண்டும்.
  - பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
  - உயர்தரம் கற்றிருத்தல் மேலதிக தகுதியாக கருதப்படும்.
  - பயிற்சி வழங்கப்படும்.

தகுதியானவர்கள் 08.11.2025 தொடக்கம் 14.11.2025வரை கைத்தொழிற்பேட்டையில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு நேர்முகத்தேர்வுக்கு சமூகம் தரவும்.

தொடர்புகளுக்கு : 077 756 1639, 077 315 1654
REECHA PAPERS (PVT) LTD,
கைத்தொழிற்பேட்டை அச்சுவேலி, யாழ்ப்பாணம்.

(5854)

## தேவை

யாழ்ப்பாணத்தில் வீட்டில் தங்கி நின்று வீட்டு வேலைகள் செய்வதற்கு உதவியாளர் தேவை.
சம்பளம் - 100,000/=
30 வயதிற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு :
075 880 7718


(5855)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378
076 097 3127


# மரண அறிவித்தல்



## திருமதி இராசதுரை புனிதவதி

வேலணை வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசதுரை புனிதவதி அவர்கள் கடந்த 06.11.2025 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம் - நித்தியலெட்சுமி தம்பதியினரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான நாகநாதபிள்ளை - இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் நாகநாதபிள்ளை இராசதுரை அவர்களின் அன்பு மனைவியும் பிரதீபன்(லண்டன்), பிரதீபா(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கிஷாந்தன்(கனடா), அஞ்சனா(லண்டன்) ஆகியோரின் மாமியாரும் தர்மாவதி(கனடா), காலஞ்சென்ற சிவகலை(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் அவினாஷ்(கனடா), ஆதித்(கனடா), றியான்(கனடா), டிஷான்(கனடா) ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற இராசம்மா, கமலாம்பிகை (கனடா) ஆகியோரின் பெறாமகளும் நாகராசாவின் மருமகளும் தனபாலசிங்கம் கஜேந்திரன், சியாணி - குமார் ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 08.11.2025 அவரது கொழும்பு இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை 09.11.2025 ஞாயிறு சொந்த ஊரான வேலணைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் நண்பகல் 12.00 மணிக்கு ஆரம்பமாகி மாலை 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வேலணை சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பிரதீபன் (மகன்)
பிரதீபா (மகள்)
கிஷாந்தன் (மருமகன்)

(5856)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org